# செந்தமிழ்


தொகுதி : 94 | ஜூலை 2000 | பகுதி : 7


திங்கள் இதழ்


மதிப்புறு ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

# தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம். பி. ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே. எஸ். டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஜயா | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடை நம்பி | உறுப்பினர் |
| திரு.எஸ். பரங்குன்றம் | உறுப்பினர் |

# செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி (ஆசிரியர்)
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ.கந்தசாமி
டாக்டர். என். சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். சி.கதிர் மகாதேவன்
பேரறிஞர். கு. துரைராசு
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணா மூர்த்தி
பேரறிஞர். எஸ்.எம். கமால்
பேரறிஞர். ஈ. கி. இராமசாமி
பேராசிரியர். சே. அரிராமநாதன்
பேரறிஞர். அ.மா. பரிமணம்

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 1000 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

# பொருளடக்கம்

1. சங்க நூல்களிற் சிற்பக் குறிப்புக்கள் ..... 229
பேரறிஞர் அ.மா. பரிமணம்

2. யானை மலை நரசிங்கப் பெருமாள் கோவில் ..... 248
பேரறிஞர். வெ. வேதாசலம்

3. மதுரை கூடலழகர் பெருமாள் கோயில்
கல்வெட்டுகள் தரும் வரலாறு ..... 251

4. கபிலர் பாடல்களின் அழகியலும் ஆளுமையும் ..... 263
பேரறிஞர் தெ.திருஞான மூர்த்தி

# சங்க நூல்களிற் சிற்பக் குறிப்புக்கள்

**(முன்னிதழ்த் தொடர்ச்சி)-பேரறிஞர் அ.மா. பரிமணம்**

மகேந்திரவர்மன் பாறைகளைக்குடைந்து குகைக் கோயில்களைத் தமிழகத்தில் அமைக்கும் மரபினைத் தொடங்கிவைத்தான். அம்முறை, பல்லவர்கள் தமிழகத்தை அகப்படுத்து முன்னர், அவர்கள் நாட்டில் பழக்கத்தில் இருந்துவந்த ஒன்றாகும். அவன் காலத்திலும் அம்மன்னன் காலத்திலும் பல குகைக் கோயில்கள் அமைக்கப்பட்டதோடு, ஒரு பெரும் பாறையைக் கோயிலாக அமைக்கும் பணியும் தொடங்கியது. இவ்விருவகை அமைப்புக்களையும் உருவாக்க மேற்கொள்ளும் முயற்சி அருமைமிக்கதாகும். முதற்கண் தக்க பாறைகள், குன்றுகள் இருக்கும் இடம் நாடிச்செல்ல வேண்டும். ஒரு கற்கோயிலாக அமைக்க வேண்டுமாயின், இயல்பாகக் கட்டடம் அமைக்கும் முறைக்கு மாறாகக் கோயிலின் உச்சி தொடங்கி, அடிவரை அமைத்தல் வேண்டும். கட்டடத்தின் எப்பகுதியிலோ, அங்கு அமைக்கப்படும் திருமேனியிலோ சிறிதேனும் பங்கம் ஏற்பட்டால், கோயில் அமைப்பு முயற்சி முற்றிலும் வீணாகும்! மேலும் இம்முறைகளால் தாம் விரும்புமிடங்களில் திருக்கோயில்களை அமைத்தல் இயலாது. இவற்றால், கற்களைத் தேவையான அளவு சதுரித்துக் கொண்டு, தரையில் வாணம் தோண்டி அடித்தளம் அமைத்து, மேலே தேவையான வடிவில் கற்களை அடுக்கிச், சுவரும் அறையும் அமைத்து, உள்ளே வேண்டும் தெய்வத்திருமேனிகளை அமைத்துக் கோயிலமைக்கும் முறை உருவாக்கப்பட்டது. இம்மூன்று வகைக்கோயிலமைப்புக்களையும் ஒருங்கே காணும் களமாகக் கடல்மல்லை நகர் - பல்லவர் உருவாக்கிய மாமல்லபுரம் - இன்றும் உலகவர் காணுமளவு சிறந்து விளங்குகின்றது.

சங்க காலக் கோயிற் கட்டடங்களும், அடுத்த காலத்தில் (செங்குட்டுவன் காலத்தில்) விளங்கிய கோயில்களும் அவன் கட்டிய பத்தினிக்கோட்டமும் பகைவர்களானன்றி, காலப்போக்கில் இயற்கையாக அழிவுற்றதனை அறிந்த, மகேந்திரவர்மன், தன் காலத்தில் தான் அமைக்கும் கோயில்களுக்கு அத்தகு நிலை ஏற்படக் கூடாது என்று கருதியே காற்றாலும் மழையாலும் பிறவகையாலும் அழிவெய்த முடியாத வகையில் கற்றளிகளாகக் கோயில்களை அமைக்க முற்பட்டான் போலும்! புதுவகையில் தான் இறைவனுக்கு - மும்மூர்த்திகளுக்கு அமைத்த கோயில் பற்றி அவனே கூறியுள்ள கூற்றுச் சிந்தித்தற்குரியதாகும். அது வருமாறு, ''செங்கல் சுண்ணாம்பு, மரம், உலோகம், இவையில்லாமல் மும்மூர்த்திகளுக்கு விசித்திர சித்தன் அமைத்த கோயில் இது''.

விசித்திரசித்தன், மகேந்திரவர்மனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று. அவன், மண்டகப்பட்டு என்னுமிடத்தில், முதன் முதலாகப் புதுமுறையில் கட்டிய கோயிற்கல்வெட்டில் இச்செய்தி இடம்பெறுகிறது.

இதனைக் கூர்ந்து நோக்கினால், அவன் காலத்திற்கு முற்பட்ட கோயில் கட்டடம் அழிந்துபட்டமைக்கான காரணத்தை ஒருவாறு உணரலாம். அதனை மெய்ப்பிக்கும் வகையில், மணிமேகலையாசிரியர் கொடுத்துள்ள ஒரு குறிப்பு அமைந்துள்ளது. அது வருமாறுசு:

*'மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்*
*கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுத்த'* - என்பதாகும்.
(மணி. 21.125,6).

தெய்வத்திருமேனிகளை, வகுத்துக் காட்டச் சிற்பியர் அந்நாளில் பயன் படுத்திய அவ்வகைப் பொருட்களையே, கோயிற்கட்டடம் அமைக்கவும் பயன்படுத்தினர் என்பதனை இதனால் உய்த்துணர முடிகின்றது. சுவரிலேயே தெய்வ உரு அமைக்கப்பெற்றன, வழிபடப்பெற்று வந்துள்ளன. இங்குக் குறிப்பிடப்பட்ட கல், நடுகல் போன்றவற்றையும், பாறையிற் புடைப்புச்சிற்பங்கள் போன்றவற்றையும், முப்பரிமாண கற்சிலையினையும் குறிப்பதாகலாம். பண்டைய சில நடுகற்சிலைகள் தவிர அக்காலப் பிறவகைக் கற்சிலைகள் இன்று காணப்பெறவில்லை.

அழியாது விளங்கும் நிலைபெற்ற கற்றளிகள்- கல்லடுக்குக் கோயில்கள்-பல்லவர் காலத்தில் தோன்றியபின்னர், மண்டளிகளின் (மண்ணாலாக்கப்பட்ட கோயில்களின்) தோற்றம் குறைந்தன. பழைய மண்டளிகள், கற்றளிகளாகப் புதுப்பிக்கப் பெற்றன. இன்று பாடல் பெற்ற-மங்களா சாசனம் செய்யப்பெற்றுள்ள-திருக்கோயில்கள் பெரும்/ பாலும் இவ்வகையில் கற்றளிகளாகத் திருத்தி அமைக்கப்பட்டனவே யாகும். தமிழகத் திருக்கோயிற் கட்டட வரலாற்றில் மாமன்னன் மகேந்திரன் செய்த புதுமையால், பாறைகளைக் காண்டற்கரிய தஞ்சைத் தரணிப் பகுதியில், மாமன்னன் இராசராசனால் இராசராசேச்ரமும், அவன்மகன் இராசேந்திரனால் கங்கைகொண்ட சோழீச்சரமும் வானுற வளர்ந்து விளங்கும் கலைப் படைப்புக்களாகத் திகழ்கின்றன; பூவார் சோலை மயிலாடப் புரிந்து குயில்கள் இசைபாடப் புனல் பெருக்கும் பொன்னியாற்றின் இருமருங்கும் எண்ணற்ற கற்றளிகள் எழில்பெற விளங்கலாயின.

சங்க காலத்தில் அரண்மனைகள், புறப்படைவீடு, வளமனைகள், பொதுமக்கள் குடியிருப்புக்கள் ஆகியன. மண், சுடுமண்(செங்கல்), சுட்ட மண் ஓடுகள், மரங்கள் ஆகியவற்றால் ஆக்கப்பட்டவற்றை, 'சுடுமண்

ஓங்கிய நெடுநிலை வரைப்பு' (பெரும்பாண் - 405) முதலிய சங்கத் தொடர்களாலும், அவற்றின் விளக்கங்களாலும் அறியலாம். தெய்வ உருக்கள் வைத்துப் போற்றப்படும் மனைகள், சுடுமண்ணால் (செங்கல்) ஆக்கப்பட்டதனை மணிமேகலை 'சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும், மையறு படிவத்து வானவர்'என்பதனால் (மணி . 3. 127,8) குறிப்பிடுகின்றது. சங்கமருவிய காலத்தில், புகழொடு மாய்ந்த சான்றோர்களை ஈமப்புறங் காட்டில் அடக்கம் செய்து, அப்பள்ளிப் படைமீது குன்று-மலைகளைப் போன்ற கோட்டங்கள் - அறைகள் - அமைக்கப்பட்டதனைக் ''குறியவும் நெடியவும் குன்று கண்டன்ன, சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டங்கள்' (மணி.6.58,9) என மணிமேகலை கூறுகிறது. மாய்ந்த மன்னா கட்டும் இது போலும் குன்றுகண்ட கோட்டங்கள் (அறைகள்) ஆயிரம் (பல) இருந்தன என்பதனையும் மணிமேகலை குறிப்பிடுகின்றது (மணி. 6..166). கோட்டம், தேவர்கள் உறைவதற்காகவும், இறந்தோர் நினைவகங்களாகவும் அந்நாளில் அமைக்கப்பட்டன. சுடுமண்ணால் அமைந்த அறை (கோட்டம்) பிற்காலத்தே கற்களால் அமைக்கப்பட்டபோது 'கல்லறை' எனப்பட்டது. இரட்டைக் காப்பியக் காலக் கட்டடங்கள், கல்லறைகள், தேவகோட்டங்கள், வளமனைகள் அனைத்தும், காலப்போக்கில் அழிவுற்றதனை நினையுங்கால், சங்க காலத்தே, அவ்வகையில் தோற்றுவிக்கப்பட்ட கட்டுமானங்கள், சிற்பங்கள் ஆகியன முற்றிலுமாக அழிந்து பட்டதில் வியப்பதற்கில்லை!

காடும் காவும் கவின்பெறு துருத்தியும், ஆறும் குளனும் வேறுபல்வைப்பும் என்றிங்ஙனம் இயற்கை நிலையாக அமைந்த வழிபாட்டிடங்களின் வேறாக, மக்களால் கட்டப்பட்டுக் காலப்போக்கில் வழிபாடற்ற நிலையில், சிதைந்து பட்ட ஒரு கோயிலினைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் அகப்பாடல் ஒன்றில் பின்வருமாறு காட்டியுள்ளார்:-

*'கொடுவில் ஆடவர் படுபகை வெரீஇ,*
*ஊர் எழுந்து உலறிய பீர் எழு முதுபாழ்,*
*முருங்கை மேய்ந்த பெருங்கை யானை,*
*வெரிந் ஓங்கு சிறு புறம் உரிஞ, ஒல்கி*
*இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென,*
*மணிப்புறாத் துறந்த மரம் சோர் மாடத்து*
*எழுது அணி போகலின், புல்லென்று*
*ஒழுகு பலி மறந்த மெழுகாப் புன்திணைப்*
*பல்நாய் துள்ளிய பறைக்கட் சிற்றில்'* (அகம். 169: 9-17)

இதனை நோக்குங்கால், வழிச்செல்லும் வணிகச் சாத்தின் மீது கணைசெலுத்திக் கொடுமை புரியும் எயினர்கட்கு அஞ்சி, ஊர் மக்கள் பதிபெயர்ந்து வேற்றூர் சென்றமை, அவர்கள் விடுத்துச் சென்ற குடியிருப்புப் பகுதிகளில் பேய்ப்பீர்க்கு முதலியன முளைக்கும் பாழிடங்களானமை, அதனால் அங்கு வந்த யானை உராய்ந்ததனால் சுவரின் மேல் அமைந்த விட்டம் விழுந்தமை, அதில் தங்கியிருந்த மணிப்புறாக்கள் வேற்றிடம் சென்றமை இட்டிகையும் சாந்துமிட்டுச் செய்யப்பட்ட அந்தச் சுவரின் மாடத்தில் சுதையால் செய்யப்பட்டிருந்த தெய்வ உருவிலிருந்து வழிபடாமையால் தெய்வத் தன்மை நீங்கியமை, அதன் காரணமாக வழிபடுவோர் பலியிட்டு வழிபடாமை, மெழுகப் படாத அதன் திண்ணையில் குட்டிகள் ஈன்ற நாய் குட்டிகளோடு இருந்தமை முதலிய செய்திகளை அறிதல் கூடும். வழிபடுமிடம், மண் இட்டிகையாலான சுவர் கொண்டும், மரங்கொண்டும் அமைக்கப் பட்டதும், மாடத்தில் சுதை வடிவில் தெய்வ உரு அமைக்கப்பட்டதும், மக்கள் குடிபெயர்ந்தமையால் அவ்விடம் அழிவுபட்டதும் ஆகிய செய்திகள் இங்குக் குறிப்பிடத்தக்கன. தெய்வ வழிபாட்டிடங்களின் அழிவுபாட்டிற்கு, அவை அமைக்கப் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் தன்மையேயன்றிப் பல காரணங்களால் நிகழும் பதிப்பெயர்வுகள்,போர் நிகழ்வுகள் ஆகியவனவும் காரணங்களாக இருந்துள்ளன.

முக்கட் செல்வர் நகர் (புறம் 6.18) அணங்குடைமுருகன் கோட்டம் (புறம் .299-6) என்று சிவபெருமான், முருகன் ஆகியோர்க்கும், அவர்களைப் போன்றே திருமால் போன்ற பிறதெய்வங்கட்டும் மண், சுதை, மரம் ஆகியவற்றாலாகிய கோயில்கள் இருந்துள்ளதனைச் சங்கநூல்கள் காட்டுகின்றன. நகரினை (கோயிலை) வழிபடுதலோடு வலம் வரல், கலந்தொடா மகளிர் கோயிலினுட்புகாமை போன்ற நியதிகளை மக்கள் பின்பற்றியுள்ளனர். எனினும் அக்காலக் கோயில்களின் சுவடுகளையும் இன்று காணமுடியாமல் உள்ளது!

காப்பியாற்றுக் காப்பியனார், பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தால் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைப் பாடுங்கால் அவன் நாட்டில் அக்காலத்தே விளங்கிய திருமால்கோயில் ஒன்றினைச் சுட்டி, மக்கள் ஆண்டுச் சென்று வழிபட்டமுறையினை அழகுறக் காட்டியுள்ளார். (பதிற்.31:79) அதற்கு உரைவரைந்த பழைய உரையாசிரியர் 'செல்வன்' என்றது திருவனந்தபுரத்துத் திருமாலை' என்று கூறியுள்ளார். செங்குட்டுவன், இமயக்கல் நாடி, வடபுலம் செல்லமுற்பட்டபோது, ''ஆடகமாடத்து அறிதுயிலமர்ந்தோன், சேடங்கொண்டு சிலர்நின்று'

ஏத்தினராக இளங்கோ வடிகள் குறிப்பிட்டுள்ளார் (சிலப்.26:62,63). அதன் குறிப்புரையாசிரியர், ''ஆடக மாடம் - திருவனந்தபுரம்; இரவிபுரம் என்பாருமுளர்'' என்று குறிப்பிடுகின்றார். 'திரு ஞெமர் அகலத்துக், கண்பொருதிகிரிக் கமழ்குரல் துழாஅய் அலங்கற் செல்வன்' என்று பதிற்றுப்பத்து கூறுவதனால் அவன் திருமறுமார்பனனாகிய திருமால் என்பதனையும், ஆடகமாடத்து அறிதுயிலமர்ந்தோன் என்று சிலம்பு கூறுவதனால் அத்திருமேனி, திருமாலின் கிடந்த கோலத்தை உணர்த்தும் என்பதனையும் இரண்டு நூல்களாலும் குறிப்பிடப்படுவது, வைணவம் குறிப்பிடும் அர்ச்சாவதாரத் திருமேனியாகும் என்பதனையும் உணரலாம். ஆனால் அந்தத் திருமேனி, எவ்வகைப் பொருளால் அமைக்கப்பட்டது என்பதனை அறியக் கூடவில்லை. பண்டைச் சேர நாடு, கேரளமாகிய இந்நாளிலும் திருவனந்தபுர வைணவத்திருத்தலம் சிறந்து விளங்குகின்றது. பழந்தமிழ் நூல்களில் குறிப்பிடப்பட்ட அவ்விடத்தே, பிற்காலத்தில் இன்று சிறப்புற்றுத்திகழும் சிற்பத் திருமேனி அமைக்கப்பட்டிருக்கலாம்.

செவ்வேளாகிய முருகன், பரங்குன்றில் உறைவதனை ''எய்யா நல்லிசைச் செவ்வேற்சேஎய்,..... குன்றமர்ந்து உறைதலும் உரியன்'', என்றும், மேலுமவன் தன், ''பன்னிரு கையும் பாற்பட வியற்றி'' அலைவாய் (திருச்செந்தூர்) சேர்ந்து 'உறைதலும் உரியன்' என்றும், அவனே திருவாவினன் குடியில்' தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள் ஆவினன்குடி அசைதலும் உரியன்' என்றும் நக்கீரர் தமது திருமுருகாற்றுப் படையில் குறிப்பிட்டுள்ளார். (திருமு.61; 118; 175) இன்றும் அப்பெயர்களில், கல் கட்டடங்களாய் விரிவான அளவில் அமைந்த கோயில்களில் வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றனவேனும், அக்கோயில்களிலுள்ள மூல மூர்த்திகளின் திருமேனிகளைச் சங்ககாலத்தனவாகக் கொள்ள இயலவில்லை. அவ்விடங்களில் விளங்கிய திருமேனிகள் காலப்போக்கில் சிதைந்து படவே, பின்வந்த மக்களால் மூல மூர்த்திகளைச் சிலை (கல்) யிலும், உற்சவமூர்த்திகளை உலோகத்திலும் அமைத்து வழிபட்டு வருவாராயினர்.

எட்டுத் தொகை நூல்கட்கு அமைந்துள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்களின் காலம் பற்றிக் கருத்து வேறுபாடிருப்பினும், அகநானூற்றில் அது முதற் பாடலாக அமைந்துள்ளமை, கலித்தொகைக் கடவுள் வாழ்த்து அந்நூல் ஆசிரியர்களுள் ஒருவரான நல்லந்துவனாரால் அமைக்கப்பட்டுள்ளமை முதலிய காரணங்களால் அப்பாடல்களைச் சங்க காலப்பாடல்களாகக் கொள்வோரின் கருத்தே வலிமையுடையதாகும்.

முருகன், திருமால், சிவன் பற்றியமைந்துள்ள அப்பாடல்கள், வடமொழியில் தெய்வங்கள் பற்றி அமைந்துள்ள 'தியான சுலோகங்க' ளோடு ஒருபுடை ஒத்துக் காணப்படுகின்றன. அப்பாடல்களில் வண்ணித்துப் போற்றப்படும் தெய்வங்கள் [யாழ் கெழு மணிடற்று அந்தணன். (அகம். கட.15), நீலமேனிவாலிழை பாகத்து ஒருவன் (ஐங்குறு. கட.1), மணிமிடற்று எண்கையாய் (ன்)' (கலி. கட.4), சேவலங்கொடியோன் (குறு.சுட.5) தீதற விளங்கியதிகிரியோன் (நற்.கட.7). தாழ்சடைப் பொலிந்த அருந்தவத்தோன் (புற.கட.13)] முதலிய செய்யுள் வடிவிலமைந்த இலக்கியப் பகுதிகளாயினும், அவற்றுள் சுட்டப் பெறும் தெய்வ வடிவங்கள் அற்றை நாள் தமிழகத்தில் சுதைவடிவிலோ, பிற அமைப்பிலோ அமைக்கப்பட்டிருந்தனவாதல் வேண்டும். இப்பாடல்கள் அக்காலத்தே அமைக்கப்பட்டு விளங்கிய தெய்வத்திரு மேனிகளைக் கண்டு பாடப்பட்டனவாதல் வேண்டும் அல்லது இவ்வாறு பாடப்பட்டனவற்றைக் கண்டு திருமேனிகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பழமையானது என்று சைவப்பெருமக்களால் கருதப்பெறும் ஆகமங்கள், பிறசைவ நூல்கள் ஆகியன குறிப்பிடும் சிவமூர்த்தங்களைக் குறிப்பிடும் மூலத் தொடர்களாகச் சங்கநூல் தொடர்கள் சில அமைந்துள்ளன. அவற்றைச் சுதைச்சிற்பமாகவோ ஓவியமாகவோ காட்டும் அக்காலச் சிற்பக் காட்சிகள் கிடைக்கவில்லை. நீலமணிமிடற்று ஒருவன் (புறம் 91-6), நீலகண்டமூர்த்தத்தையும், பெண் உரு ஒருதிறன் ஆகின்று அவ்வுருத் தன்னுள் அடக்கிக் காக்கினும் சுாக்கும் (புறம் 1=7,8) அர்த்த நாரி வடிவத்தையும், கலித்தொகைக் கடவுள் வாழ்த்து, ஆடும் கூத்தப்பிரான் நிலையினையும் உணர்த்தும் பாங்கில் அமையக் காணலாம். ஆலமர் கடவுள் (புறம் 198-9) என்பதனை ஆலிலை மேல் துயிலும் திருமால் என்று பழைய உரையாசிரியர் விளக்கினாலும், பிறர் உரையாக ஆலமரத்தின் கீழ் அமர்ந்த சிவன் என்பதனையும் குறிப்பிட்டுள்ளார். இங்கும் பிற சங்க நூலுள்ளுள் இடம் பெற்றுள்ள ஆலமர் செல்வன் என்று வரும் பெயர்கொண்டு தென்முகக் கடவுள் மூர்த்தத்தை (தச்சிணா மூர்த்தி)க் குறிப்பதாகவே கருதுவது தக்கது. இவ்வாறெல்லாம் கூறப்பட்டதற்கான சங்ககாலத்திருமேனிகளை இன்று காண இயலவில்லை.

சங்க நூல்களுள், குறிப்பாகப் பத்துப் பாட்டில் 'நெடுநல் வாடை' என்னும் பாடல் பலவகைச் சிறப்புக்கள் கொண்டுள்ளது. அஃது அகவாழ்வில் தலைவன் பிரிந்த விடத்தே ஆற்றியிருத்தலால் கற்பு மாட்சியைப் புலப்படுத்துதல், புறவாழ்வில், எதிர்வரும் இடர்களைப்

பொருட்படுத்தாமல் பாசறையிலிருந்து கடமையாற்றும் பாங்கினால் வீரவாழ்வின் மாட்சியைப் புலப்படுத்தல் ஆகியவற்றை, ஒருங்கே உணர்த்தும் வகையில், வாடைக் காலத்தை முன் நிறுத்தி, ஓர் அரசன் அரசியின் வாழ்க்கைப்பகுதியினை அரிய சொல்லோவியமாக்கிக் காட்டப்பட்டது நெடுநல் வாடை. இதனைச் 'சிற்பப் பாட்டு' என்று சிறப்பித்தோருமுளர். கைவல்ல ஒரு சொற்சிற்பி (நக்கீரர்), சொல்லால் குயின்ற சிற்பமாக விளங்குவதாலும், சிற்பக் கலைக் கூறுகள் பல பொன்னிடை மணியென ஒளிர்வதாலும் சிற்பப் பாட்டு என்பது பொருத்த முடையதேயாகும்.

பாண்டியன் நெடுஞ்செழியன், போர் மேற்சென்று பாசறைக்கண் இருக்குங்கால், பாண்டிமாதேவி, வருத்தும் வாடைக் காலத்தில் பிரிவுத் துயராற்றி இருக்கும் அரண்மனைப் பகுதி காட்டப் படுகின்றது. அரண்மனையில் அரசியர் முதலியோர் தங்குதற்குரிய மனைப் பகுதிகள் எவ்வாறமைக்கப்பட்டன என்பதனை முதற்கண் காட்டுகின்றார். அது,

*'விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்*
*இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்பு*
*ஒருதிறம் சாரா வரை நாள் அமையத்து*
*நூலறி புலவர் நுண்ணிதின் கயிறிட்டுத்*
*தேஎங்கு கொண்டு தெய்வம் நோக்கிப்*
*பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனை வகுத்து'.* என்பதாகும்.

(நெடுநல். 73-78)

இப்பகுதிக்குரிய நச்சினார்க்கினியர் உரை, பிறருடைய உரையும் விளக்கங்களும் ஆகியவற்றைப் பார்க்குங்கால் அக்காலத்தில் அரண்மனையோ, வளமனையோ அமைக்குங்கால், அக்கால மக்கள் மேற்கொண்டு பின்பற்றிய கட்டடக்- கலைமாட்சியும், அதன் சார்பிலமையும் ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளின் சிறப்பும் புலனாகும். கதிரவன் இயக்கத்தைக் கொண்டு, திசைகளின் செம்மை அறிந்து, தெய்வம் போற்றி மனைவகுத்தபாங்கினை உணரலாம். இசைக்கு 'நரம்பின் மறை' என இலக்கண நூல்கள் இருந்தாற் போல மனைகள் கோலுவதற்கும் நூல்களும், அவற்றில் வல்லவர்களும் இருந்துள்ளனர். இக்காலத்தே மனையடிசாத்திரம் (வாஸ்து சாஸ்திரம்/ vasthu sastra) என்று நூல்கள் உள்ளமை போலச் சங்க காலத்தும் கட்டட-சிற்பக்கலை நூல்களும் வல்லுநர்களும் இருந்துள்ளனர். அவர்களை 'நூலறிபுலவர்' என்று நெடுநல்வாடை குறிப்பிடுகின்றது. அதற்கு நச்சர், 'சிற்பநூலை அறிந்த

தச்சர்' என விளக்கமளிப்பர். இதுபோலும் அரண்மனைப்பகுதியினை இளங்கோவடிகள், 'நூலோர் சிறப்பின், முகில்தோய் மாடம்' என்பார் (சிலப் - 14:67,68). நூலோர் என்பதனை அரும்பதவுரையாசிரியர் 'சிற்பர்' என்று விளக்குவர்.

'மன்னர்க் கொப்ப மனை வகுத்து' என்றமையால், 'மனைகள்' வாயில்கள், மண்டபங்கள் ஆகியன வகுக்கப்பட்டன என்பதும், இப்பகுதிகளை யெல்லாம் ஒரு சேர வளைத்து மதில் அமைக்கப்பட்டது என்பதும், அதில் இரும்பாலாகிய ஆணிகள் பட்டங்கள் ஆகியவற்றால் பிணிக்கப்பட்டுச் செவ்வரக்கு பூசிச் செய்யப்பட்ட இரட்டைக் கதவு பொருத்தப்பட்டது என்பதும் கூறப்பட்டுள்ளன. இதில் மரவேலை, இரும்பு வேலை செய்தல் வல்ல தச்சர்(கம்மியர்) ஈடுபட்டிருந்தனர். இரட்டைக் கதவு பொருத்தப்பட்ட நெடிய நிலைக்கு மேலே, 'நடுவே, திருவும் இரண்டு புறத்தும் இரண்டு செங்கழு நீர்ப்பூவும், பிடியுமாக அமைக்கப்பட்ட உத்தரக்கற்கவி அமைக்கப்பட்டது. இக்காலத்தே 'கஜலக்குமி' உருவில் நிலைக்கு மேல் மரப்பலகையில் செய்து வைக்கப்படுவதனை நினைவூட்டும் வகையில் இஃது அமைந்துள்ளது. தொடக்கக் காலத்தில் மரத்தாலாகிய நிலையின் மேல், பலகையில் புடைச்சிற்பமுறையில் அமைக்கப்பட்டிருக்கக் கூடிய இந்த அமைப்புப் பிற்காலத்தில் கற்பலகையில் அமைக்கப்பட்டனவாதல் வேண்டும். அதனால்தான் 'நாளொடு பெயரிய விழுமரம்' (நெடுநல்,82) உத்தரம் என்னும் நாளின் பெயர் பெற்ற உத்தரக்கற்கவி' என்று விளக்கியுள்ளார் உரையாசிரியர். அக்கதவு, ஆணிகளை முடுக்கப் பலகைகளை இடைவெளி தெரியாமல், கைவல்ல கம்மியரால் இணைக்கப்பட்டது. அந்த உயர்மதிலின், நெடிய கதவொடு கூடிய வாயில், வெற்றிக் கொடியேந்தி யானைகள் உள்ளே புகத்தக்கதாய் மலையினை இடையிலே திறந்தாற் போல அமைந்தும் நெடிய கோபுரங்களைக் கொண்டும் விளங்கியது. மதிலின் உட்புறத்தே மணல் முற்றங்கள், செயற்கை அருவிகள், நிலாமுற்றத்தே சேர்ந்த நீர் விழும் தூம்புகள் முதலிய விளங்கின.

அடுத்த காட்சியாக, அரண்மனையின் உட்பகுதிகள் காட்டப்படுகின்றன. பனிமிக்க, கூதிர்க்காலத்தே இருள்தரும் நேரமாதலில், அரசமாதேவியர் உறையும் அந்தப்புரத்தில் நிலைவிளக்குகள் ஏற்றப்பட்டுள்ளன. இரவு முழுவதும் தொடர்ந்து எரிய வேண்டியிருத்தலின் விளக்கில் நெய்குறையுந் தோறும், நிரப்பியும், திரியினைத் தூண்டியும் உரிய ஏவற் பெண்டிர் கடமையாற்றுகின்றனர்.

இங்கு ஏற்றப்பட்டுள்ள விளக்குப் பற்றிய செய்தி சிந்தனைக் குரியதாகின்றது. 'யவனர் இயற்றிய வினைமாண்பாவை, கையேந்து ஐ அகல்' என்பது அச்செய்தியாகும் (நெடுநல்.101,102). 'சோனகர் பண்ணின தொழில் மாட்சிமைப்பட்ட தன் கையிலே ஏந்தியிருக்கின்ற வியப்பையுடைய தகளி(விளக்கு) என்பது. பாவை உருவினை உலோகத்தில் செய்வது என்பது சங்ககாலத் தமிழகம் அறிந்த-தொன்றாகும், கொலைத் தண்டனையின் நீங்குதற்காகத் தண்டனைபெற்ற பெண்ணின் எடையளவிற்குப் பொன்னாற் செய்த பாவையினை, அவள் தந்தை கொடுக்க வந்ததனை ஏலாது, நன்னன் என்னும் வேந்தன் பெண்ணைக் கொல்வித்த கொடுமையினைப் பரணர் 'அவள் நிறை, பொன் செய் பாவை கொடுப்பவும், கொள்ளான் பெண் கொலைபுரிந்த நன்னன்' என்று குறிப்பிட்டுள்ளார். (குறு. 292 - 3-5). இதனால் பொன்முதலிய உலோகத்தால் பாவை முதலிய உருவங்கள் செய்யும் சிற்பத்திறம் பண்டு சிறந்திருந்தது புலனாகும். பாண்டியன் அரண்மனையில் ஏற்றப்பட்ட விளக்கு வேற்று நாட்டவராகிய யவனர் எனப்படும் சோனகரால் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. கடியலூர் உருத்திரங்கண்ணனார், 'யவனரால் அன்னத்தின் வடிவில் செய்யப்பட்ட விளக்கினைக்காட்டுகின்றார். 'யவனர் ஓதிம விளக்கு' என்பது பெரும்பாணாற்றுப் படை (பெரும்.,316,317), அக்காலத்தே அரண்மனைபோலும் செல்வமனைவாயிலில் யவனர் காவல் புரிந்துள்ளமை போல, யவனர்களின் அரிய கைவினைப் பொருட்கள் அரண்மனை போன்றவற்றை அலங்கரித்துள்ளன என்பது புலனாகின்றது. யவனம் போன்ற பிறநாடுகளிலிருந்து மட்டுமல்லாமல், தமிழகம் அல்லாத பிற இந்தியப் பகுதிகளிலிருந்தும் அணிகலன் செய்வோர் அருவினைச் சிற்பியர் தமிழகம் போந்து 'தமிழ் வினைஞர்களொடு கலந்து செயற்பட்டதனைச் சங்க காலத்தை அடுத்துத் தோன்றிய மணிமேகலை'

*மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்*
*அவந்திக் கொல்லரும், யவனத் தச்சரும்*
*தண்டமிழ் வினைஞர் தம்மொடுங் கூடிக்*
*கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினைப்*
*பவளத் திரள்கால் பன்மணிப் போதிகை"*

(மணி. 19: 109-110).

என்று காட்டுகின்றது.

இதனால், பண்டைத்தமிழகம், சிற்பம் முதலிய கலைகளில், அவ்வத்துறை சார் பிறநாட்டு வல்லுநர்களோடு, ஒத்த நிலையிலும் உயர்ந்த நிலையிலும்

விளங்கிக் கலை நுட்பப் பரிமாற்றம் நிகழும்அளவு சிறந்து செழித்துள்ளமை புலனாகிறது. 'பாவை விளக்கினை' யவனர் இயற்றியதெனக் கருதியவர்களுள் சிலர் யவனர் ஓதிமவிளக்கு என்னும் போது அதனை யவனர் செய்ததாகக் கொள்ளாமல் தமிழர் இயற்றியதெனக் கொண்டு, ஓதிமம் தமிழ்நாட்டிற்குரியது என்னும் காரணமும் கூறுவர். தமிழகம் வந்த யவனர் தமிழகத்திற் காணப்பட்ட ஓதிம வடிவிலும் விளக்கினைச் செய்திருத்தல் கூடும்;ஆடற்கலை இருபாற்கு முரியதாயினும், மகளிர்க்குச் சிறந்தது என்பதனைச் சிலப்பதிகாரத்தாலும், பல பிற்காலச்சுதை உருக்கள், வண்ண ஓவியங்கள், சிலைகள் போன்றவற்றாலும் உணரலாம். *அரண்மனை அந்தப்புரத்தில் காட்டப் பட்ட பாவை விளக்கு பிற்காலத்தில்* திருக்கோயில்களில் இடம் பெற்ற சிறப்பினை இன்றும் காணலாம். இருபாலாரும் சென்று வழிபடும் கோயிலில் பாவை விளக்குப் போல, ஆடூஉவிளக்கு அமைக்கப்படாமை கொண்டு அது அழகுணர்ச்சி கருதி வைக்கப்பட்டது என்பதனை உணரலாம்.

பாண்டியனது அந்தப் புரத்தில் அரசியின் தனியிடம் - உறங்கும் அறை காட்டப்படுகின்றது. அந்த அறையினை நக்கீரர் 'கருவொடு பெயரிய காண்பின் நல்லில்' என்கின்றார். (நெடுநல் .114) 'கருவோடே பெயர் பெற்ற காட்சிக் கினிய நன்றாகியஇல், என்றது கருப்பக்கிருகம் என்றவாறு' என்று நச்சர் விளக்குவார். அதன் சுவர், வெள்ளிபோன்ற சாந்து பூசப் பெற்றதும், நீலமலைபோலும் திரண்டதூண்கள் கொண்டதும், செம்பினாற் செய்தது போன்றதுமாக விளங்குகின்றது. சுவரில் 'உருவப்பல் பூ ஒரு கொடி வளைஇ' என்று நக்கீரர் குறிப்பிட்டுள்ளது (நெடுநல்.113) அரிய செய்தியாகும். வெண்ணிறச் *சுதை தீற்றபட்ட* உட்புறச்சுவரில், பன்னிற மலர்கள் பொருந்திய கொடிகள் பதிக்கப்பட்டுள்ளன. இக்காலத் 'தாசுமகாலின்' (Tajmahal at Aqra)உள்ளே சென்று காண்பவர்கள், வெண்பளிங்குக்கற்களாலான, சுவரின் மேற்பகுதியில், மாணிக்கம், மரகதம் போலும் மதிப்புமிக்க கற்களால் செய்யப்பட்ட மலர்க்கொடிகளும், 'கொரான்' வாசகங்களும் பதிக்கப் பெற்று மட்டப்படுத்தியுள்ள பகுதிகளையும், அம்மணிப்பகுதிகளில் சில பெயர்க்கப் பட்டுள்ளதனையும் காணலாம். அக்கட்டடம் போல அரண்மனைக் கருவறையின் சுவரும், பல்வண்ண மணிகளால், மலரும் கொடியுமாகச் செய்து பதிக்கப்பட்டிருந்தமையினை உய்ந்துணரலாம். இதனை, 'நெடிய சுவரிலே, வடிவழகினையுடையவாகிய பல பூக்களையுடைய வல்லிசாதியாகிய ஒப்பில்லாத கொடியை எழுதிப் புதைத்த கருவோடே பெயர்பெற்ற காட்சிக்கினிய நன்றாகியஇல்'. என்ற உரையாசிரியர் கூற்றால் உணரலாம்.

அடுத்து, அரசி துயிலும் கட்டில் கூறப்படுகின்றது. இதில் சிற்பக் கலையின் பிறிதொருபிரிவின் நுட்பங்கள் காட்டப்பட்டுள்ளன. அரசு கட்டிலின்வேறானது, அரசியின் இக்கட்டில், கணவராய் விளங்கும் அரசற்கல்லது பிறர்க்குக் காண்பரியது, சிற்பம் முதலிய பலதிறக் கலை நுட்பங்களும் பாங்குறத்திகழும் பான்மையது. இளமை முறுக்குடன் போரிற் பொருதுபட்ட களிற்றின் தந்தங்கள் கொண்டு, அமைக்கப்பட்டது அக்காட்டில். அரிமா முதலியவற்றை வேட்டையாடும் செயல்பொறித்த தகடுகளைப் பொத்திச் செய்யப்பட்டது. பல்வேறு சிற்ப, சித்திரவேலைப்பாடுகள் அமைந்தது. மூட்டுவாய்கள் நன்கு பொருத்தப்பட்டு, சாளரங்களாகத் திறந்த தகடுகள் ஆணிகளால் தைக்கப்பட்டது. பட்டிழையில் கோக்கப்பட்ட முத்துச் சரங்கள் ஞால விடப்பட்டது.இவ்வாறெல்லாம் சிற்ப, சித்திரக் கலைத் திறங்களால் மாட்சிமைப் பட்ட சிறப்புடையது அக்கட்டில். அதில் விரிப்புக்களும் இடப்பட்டிருந்தன. அக்கட்டிலே ஒரு கலைக்கருவூலமாக விளங்கும் பண்புடையதாகத் திகழ்ந்தது. அதன் விதானம் நீலவானக் காட்சியாய்த் திங்களைப் பிரியாமல் உடன் செல்லும் உரோகிணிக்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. அரசனது பிரிவால் வருந்தும் அரசி அதன்கண் வருந்தி உறையும் காட்சியினை நக்கீரர் காட்டுகின்றார். கட்டிலின் அடித்தளத்தில் வீரக் காட்சியும், மேல் விதானத்தில் திங்கள் உரோகிணி உடன் அமைந்த காதற் காட்சியும் நக்கீரரால் கவினுற இணைத்துக் காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பப் பாட்டின் சிறப்பினால், நுண்கலைகள், பயன்படுகலைகள் ஆகிய பலவகைக் கலைத்துறைகளில் புலமை மிக்கவராய் - நூலறிபுலவராய் நக்கீரர் விளங்கக் காணலாம்.

நேரே சிற்பக் கலையொடு தொடர்புடையன அல்லவேனும், இயற்கையை, மனித உணர்வுகளை, இவைபோன்றவற்றைக் கூர்ந்து நோக்கித் தம் மனத்தகத்தே பதிவு செய்வதிலும், வெளிப்படுத்துவதிலும் நக்கீரர் பெற்றிருந்த நுண்மாண் நுழைபுலத்திற்குச் சான்று பகரும் இரண்டொரு குறிப்புக்களைக் காண்பது ஈண்டைக்குப் புறம்பாகாது. அன்று நிகழ்ந்த போரின் முடிவில் படைஞர்களுடன் பாசறையில் தங்கியுள்ள பாண்டியன் நெடுஞ்செழியன், இரவையும் பனியையும் பொருட்படுத்தாது, தன் பாசறை இருப்பின் புறம்போந்து, பிற இருப்புக்களில் புண்பட்டு வருந்தும் வீரர்களுக்கு ஆறுதல் கூறும் வகை, ஒவ்வொரு கூடாரத்திற்கும் (படக் கிருகம்) செல்கின்றான். அங்குப் பல சுடர்க்கொழுந்தாய் எரியும், பாண்டில் விளக்கின் (கால் விளக்கு) தீக்கொழுந்து வாடைக்காற்றால், தெற்கு நோக்கிச் சாய்ந்து ஒளிர்கின்றது. போர்புரிந்து மீண்ட குதிரைகள் மீது பனித்துளிகள் திரண்டு நீர்த்துளியாய்

விழும் போது அதனை உதறுகின்றது. கூடாரம் தோறும் செல்லுகையில், படைத்தலைவன், இன்ன வீரன், இன்ன வகை பொருது புண்ணுற்றான் எனக் காட்டுகின்றான். ஆறுதல் கூறி அப்பால் செல்லும் வேந்தனது மேலாடை, வாடையால் நழுவ, அதனைத் தன் இடக்கையால் தழுவி அணைத்துக் கொண்டு, வலக்கையினைத் தன்னொடு வாளேந்திவருவான் தோள் மீது வைத்துக் கொண்டுசெல்கின்றான். ஆறுதல்பெற்ற வீரர்கள் அகமலர்கின்றனர். பனித்துளி படராவண்ணம், வீரர் ஏந்திவரும் கொற்றக் குடை சில்லென்ற வாடைக் காற்றால் தவ்வென்று ஒலித்தது. படைமுதலி ஏந்திச் செல்லும் வேலின் தலைப்பகுதியில் வேம்பு கட்டப்பட்டுள்ளது. இந்தக் காட்சியில் இப்பாடல், அகப்பாடலாகவோ, புறப்பாடலாகவோ அமைந்துவிடாமல் இரண்டும் கலந்தநிலையில் விளங்குவதாதலின் குறிஞ்சிப் பாட்டு என்றது போல முல்லைப் பாட்டு எனப்பெயர் பெறாதாயிற்று. படைமுதலியின் கையிலுள்ள வேலின் தலையில் கட்டிய வேம்பினால், இது புறப்பாடலாகும் என்று கருதும்படி அமைந்துள்ளது. இரவிலும் உறங்காது, கட்டிலின் மேற்பக்கம் எழுதப்பட்ட திங்கள் - உரோகிணிக் காட்சி எண்ணிக் கலங்கும் அரசியின் நிலையினை,

> ***'உரோகிணி நினைவன நோக்கி நெடிதுயிரா***
> ***மாயிதழ் ஏந்திய மலிந்துவீழ் அரிப்பனி***
> ***செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெரியா***
> ***புலம்பொடு வதியுநன்'*** (நெடு.நல்.163-165). என்று நக்கீரர்

குறிப்பிட்டுள்ளார்.

இப்பகுதியின் நுட்பங்கள் ஈண்டு விரிப்பிற் பெருகும். மார்கழித்திங்களில் பிற்காலத்தே நிகழும் விதிவலம் வரும் காட்சியில், எதிர் எதிரேவரும் இரு கோட்டிகள் (குழுக்கள்) சந்திக்கும் நிலையில் ஒன்றின் தலைவர் 'பனிக்காலம் கொடிது' என்று கூறப் பிறிதொன்றின் தலைவர் 'பனிக்காலம் நன்று' என்று கூறிச்செல்ல, இரு கோட்டிகளில் உள்ளோர் புரியாது வினவியபோது, பனிக்காலம் + கொடிது, பனிக்கு ஆலம் நன்று' என்று தலைவர் விளக்கியதாக ஒரு கதை கூறுவதுண்டு. ஓராற்றான் அதனை ஒப்ப, பிரிந்து ஆற்றாதவர்க்குத் துன்பம் தருவதாகவும், பிரிந்தும் புறத்தே செயல்படுவோருக்கு இன்பம் தருவதாகவும் அமைவதனால், அந்நுட்பம் புலப்பட 'நெடுநல் வாடை' என்று இப்பாடல் பெயர் பெற்றது. பல்வகை இன்பச் சூழலுக்கு இடையே வாழும் அரசிக்குத் துன்பம் செய்வதால் நெடிய வாடையாகவும், பல்வகை துன்பச் சூழல் மிக்க நிலையிலும் கடமையில் ஈடுபட்டமையால் வேந்தனுக்கு நல்வாடையாகவும் அமையுமாறு பெயர் அமைக்கப்பட்ட

திறம் நினைந்து இன்புறத் தக்கது. 'நெடுநல்வாடை' யினை, அதில் இடம் பெற்றுள்ள சிற்பச்செய்திகளால் மட்டுமேயன்றி, சிற்பம் போலும் நுட்பம் விளங்க யாக்கப்பட்டுள்ளமையாலும் சிற்பப்பாட்டு எனல் பொருந்துவதாகும்.

'போலச் செய்தல்' என்பது மனித மனத்தின் இயல்புகளுள் ஒன்று. செய்தற்குப் பயன் படுத்தப்படும் பொருட்களுக்கும் கருவிகளுக்கும் ஏற்ப அப்படைப்புக்கள் ஓவியம், சிற்பம் முதலிய வகைகளில் கலைப்பண்பு பெற்றுவிளங்கும். அவை மனிதக் கற்பனையொடு கலக்கும் போது அரிய நுண்கலைப் படைப்புக்களாகும். தாசுமகால், அமெரிக்க விடுதலைத் தேவியின் சிலை, சரவணபெலகோளா சமணச் சிலை, என்றிங்ஙனம் அவை தோன்றிவிளங்கக் காணலாம். நாம் காண, உருவாகிய சென்னை வள்ளுவர் கோட்டம், குமரித்துறைத் திருவள்ளுவர் சிலை ஆகியனவும் *இவ்வரிசையில்* அடங்கும்.

இவ்வகையில், சங்ககாலத்தே, அக்காலப்புலவர் வியந்து குறிப்பிடும் வகையில், மலைச்சாரலில் ஒரு அரிய சிற்பக்கலைப் படைப்பு இருந்துள்ளது. பெயர் அறியப் பெறாத நற்றிணைப் புலவர் ஒருவர், அப்படைப்பினைப் பற்றிப் பின் வருமாறு கூறியுள்ளார்.

> *"தேனுடை நெடுவரைத் தெய்வம் எழுதிய*
> *வினைமாண் பாவை"* -(நற் 185=10,11)

மிக்க அழகு பொருந்திய தலைவிக்கு உவமையாகக் கூறப்பட்டது இது. இங்குப்பாவை என்பதனை விளக்கும் உரையாளர் தந்துள்ள விளக்கம் நோக்கத்தக்கது. 'கொல்லிப் பாவை-அம்மலையிலுள்ள (கொல்லிமலை) தேவரையும் முனிவரையும் துன்புறுத்த வருகின்ற அவுணரும் அரக்கரும் அப்பாவையின் நகையைக் கண்டு மயங்கி உயிர் விடும்படி தேவதச்சனாக்கிவைத்த பெண்வடிவினது. அவுணரும் அரக்கரும் போதரு கால் அவர் வாடை பட்டவுடன் தானே நகை செய்யுமாறு பொறியுள் வைக்கப்பட்டது. அது நகைத்துக் கொல்லும் என்பதனை, 'திரிபுரத்தைச் செற்றவனும் கொல்லிச் செழும்பாவையும் நகைக்கக் கற்றதெல்லாம் இந்த நகை கண்டாயோ' (சித்திரமடல்) என்றதனாலுமறிக. பிற்காலத்தெழுந்த இந்தப் பாவை விளக்கத்தில், சற்றே 'பௌராணிகத்தன்மை' காணப்பட்டாலும், பாவையின் சிறப்பினை - பெருமையினை அறிய முடிகின்றது.

தலைவனது நெஞ்சினின்றும் தலைவி அழியாது நிலைத்து நிற்கும் தலைவியின் தன்மைக்கு உவமை கூறும் வகையில், பரணர் தம்

நற்றிணைப் பாடாலொன்றில் இப்பாவையினைப் பற்றிக் கூறியிருப்பது உளங்கொளத்தக்கது':-

*'செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்*
*தெய்வங் காக்கும் தீதுதீர் நெடுங்கோட்டு*
*அவ்வெள் அருவிக் குடவரை அகத்துக்*
*கால்பொருது இடிப்பினும் கதழுறை கடுகினும்*
*உருமுடன்று எறியினும் ஊறுபல தோன்றினும்*
*பெருநிலங் கிளரினும் திருநல உருவின்*
*மாயா இயற்கைப் பாவை'* -(நற். 201 =5-11)

பலாமரங்கள் நிறைந்த கொல்லிமலை, தெய்வத்தால் காக்கப் பெறும் தீதில்லாத நெடிய சிகரங்களுடையது. மேற்குமலைத்தொடரிலுள்ள அம்மலைச் சாரலில் அருவி முழங்கி இறங்கும் சூழலில் பாவை அமைந்துள்ளது. பெருங்காற்று மோதித்தாக்கினாலும், பெருமழை விரைந்து பெய்தாலும், இடி சினந்து தாக்கினாலும், வேறு பல இயற்கை இன்னல்கள் தோன்றினாலும், நிலம் அதிர்வு போன்றவற்றால் இடர் விளைந்தாலும் தனது அழகு நல வடிவம் கெடாது விளங்கும் இயல்பினது அப்பாவை என்பது பரணர் தரும் விளக்கமாகும். இடர் விளைந்தாலும் தனது நல வடிவம் கெடாது விளங்கும் 'கொல்லி நிலைபெறு கடவுளாக்கிய, பலர் புகழ்பாவை' என்று கல்லாடனார் கூறுவர் (அகம் 109: 15-17). மயன் என்னும் தெய்வத்தச்சன் செய்தது என்று கூறுவது போல இங்ஙனம் கூறுவது ஒருமரபு போலும். வினைமாண் சிற்பாசாரியர்களைத் தெய்வம் என்று கருதிப் போற்றுவது இயல்பே! இக்கொல்லிமலை ஓரிக்குரியது என்பதனை, 'வல்வில் எனச்சிறப்பிக்கப் பெற்ற ஓரி என்பானைக் கொன்று அவற்குரிய கொல்லிமலையினைச் சேரவேந்தர்க்குக் கொடுத்தான்' என்னும் செய்தியைக் கல்லாடனார் தன் பாடலொன்றில் கூறியுள்ளார். (அகம் 100:12-17). இவ்வாறெல்லாம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கொல்லி மலைக்கண் அமைந்த பாவை எதனாற் செய்யப்பட்டது என்பதனை அறியக் கூடவில்லை. உலோகத் தாலோ கல்லாலோ அமைக்கப்படவில்லை என்பதனையும், மரம், மண், இட்டிகை, சுதை, வண்ணங்கள் கொண்டு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதனையும், உய்த்துணர முடிகின்றது. சங்க காலத்தமிழ் மக்களின் சிறபக் கலை நுட்பத்திறனுக்குச் சான்றாகத்திகழ்ந்த அந்தப்படைப்பு காலவெள்ளத்தில் அழிந்துபட்டது. எவ்வகை இயற்கைச் சீற்றத்தாலும் அழியாது எனக் கூறப்பட்ட அப் பாவை அழிந்துபட்டு இன்று சங்க இலக்கியத்தில் சொல்லோவியமாகத் திகழ்வது அதனைப் பயில்வார்க்கு ஆறுதல் அளிப்பதாகும், புகார் நகருக்கு ஒடுக்கம்

என்பதில்லை என்று இளங்கோவால் சிறப்பிக்கப்பட்ட நகரம் இன்றில்லாததுபோல ''மாயா இயற்கைப்பாவை'' என்று பரணரால் சிறப்பிக்கப் பெற்ற கொல்லிப்பாவையும் இன்றில்லா தொழிந்தது!

கண்கவரும் வகையில், பேரளவில் சுதை முதலியவற்றால் ஆக்கப் பெற்ற சிற்ப உருவங்களோடு, சிறிய அளவில் இயக்கினால் இயங்கும்படி அமைக்கப்பட்ட பாவைகளும் அக்காலத்தே இருந்துள்ளன. காதற் பரத்தை கூற்றாக அமைந்த பாடலொன்றில், தன் புதல்வனை ஈன்ற தாயிடம் (தலைவனின் மனைவி) அவள் விரும்புமாறு செயற்படுபவன் என்பதனைக் குறிப்பிடும் ஆலங்குடி வங்கனார் 'கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை (கண்ணாடியில் தோன்றும் பிரதிபிம்பம்) யினைக் குறிப்பிடுகின்றார் (குறு.8=4,5). கோவூர் கிழார் தம் பாடலொன்றில், கூத்துக் களத்தில் ஆடும் பாவை பற்றி,

*'வல்லோன் தைஇய வரிவனப்புற்ற*
*அல்லிப் பாவை ஆடு வனப்பு ஏய்ப்ப'* (புறம் : 38= 16,17)

எனக்குறிப்பிட்டுள்ளார். பாவை என்பதனால் இவ்வாறு பாவைக் கூத்தில் இடம் பெறும் பாவைகள் ஆண், பெண்வடிவங்களில் அமையலாம் என்பதனைப் பழைய உரையாசிரியர், ''அல்லிப் பாவை ஆடு வனப்பு என்றது, ஆண் கோலமும் பெண் கோலமுமாய் அவ்விருவரும் ஆடும் கூத்தை' என விளக்குவர். இதனைக் கூர்ந்து நோக்கினால், ஆண் பெண் பாவைகளை இயக்கி ஆட்டுவிக்கும் கூத்தேயன்றி, ஆணும் பெண்ணுமாகிய மக்கள் ஆண் கோலமும் பெண்கோலமும் புனைந்து களத்தில் ஆடுவதும் அல்லிக் கூத்தாகும்'' என்பதனை உணர்தல் கூடும்.

நல்லந்துவனார், தம் நெய்தற்கலியுள், 'அறையுற்ற, உப்பியல் பாவை உறையுற்றது போல' என்றொரு உவமைகூறியுள்ளார். (கலி.138=16). பாத்தியுள் பாய்ச்சிய கடல் நீர், கதிரவன் வெப்பத்தால் திடப்பொருளான உப்பாக மாறும் போது, அது குறிப்பிட்ட வடிவிலும் அளவிலுமே உருவாகும் என்பது அறிவியல் உண்மை. பாவை செய்யுமளவு கடல்நீர் உப்பு ஒரு பாறையாக உருவாகாது. கல் உப்பு என்னும் பாறை உப்பாயின் அதில் பாவை செய்தல் கூடும். நல்லந்துவனார் பாடலுள் இடம் பெறுவது நெய்தற் கருப் பொருளாதலின், அவர் 'உப்பியல் பாறை' என்றதனை இல் பொருளுவமையாகக் கருதிப் பொருள் கொள்வது ஏற்புடையதாகும். மரத்தால் பாவை செய்து அதனை கயிற்றால் இயங்கச் செய்யும் கலை பழந்தமிழகத்திலிருந்ததனை வள்ளுவர். 'மரப் பாவை நாணால் உயிர் மருட்டியற்று' என்னும் உவமையாற் காட்டியுள்ளார் (குறள். 1020). இயங்குமாறு,

பொறியமைத்து பாவைகள் செய்யப்பட்டன என்பதும், அப்பொறி சிதைந்த நிலையில் பாவை இயக்கமிழந்து விழுந்து விடும் என்பதும், 'வல்லோன் பொறி அமைபாவையின்' (அகம்,98:19,20) என்றும் 'நல்வினைப் பொறியழி பாவையின் கலங்கி நெடிதுநினைந்து அடைந்தோன்' (நற்,308:7,8) என்றும், வரும் பகுதிகளால் அறியப்படும்.

பண்டு தமிழ்வேந்தர் பயன்படுத்திய நால்வகைப் படைகளுள் தேர்ப்படை சிறப்பானது. காலாட்படை தனிவீரர்களின் தொகுதியாகவும், குதிரைப்படையும் யானைப்படையும் வீரரும் விலங்கும் இணைந்தியங்கும் தொகுதியாகவும் அமையத் தேர்ப்படை, மரம், உலோகம், படம் முதலியன கொண்டு செய்யப்பட்ட தேர், தேரோட்டி, தேரினை இழுத்துச் செல்லும் குதிரைகள் ஆகியன கொண்டமையும் தொகுதியாகும். அமைதிக் காலத்தில் அரசர்கள் தேர் ஏறி நகர் வலம் வருதற்கும் தேர்கள் பயன்பட்டன. தேர்களின் மேற்புறமும் பக்கங்களும் கவின்மிக்க சிற்பங்கள், ஓவியத்திரைகள் கொண்டிலங்கும். சிற்ப வேலைப்பாடுகள் விளங்கத் தேர்கள் அமைக்கப்பட்டிருந்ததனைச் சங்கநூல்கள் குறிப்பிடுகின்றன. இனங்காட்டுதற்குக் கொடியும், எச்சரிக்கை காட்டுவதற்கு மணிகளும் தேர்களில் கட்டப்பட்டிருக்கும். சிற்பம், சித்திரம், பொறிகள் இயற்றல் முதலிய பலவகைத் திறங்கள் அமையப் பெற்ற தேர்ச்சிற்பிகள் பலர் இருந்துள்ளனர். அதியமானின் பேராற்றலை, பெருவலிமையை விளக்கவந்த ஔவையார் கூறிய ஓர்உவமம், தேர்த்தச்சர்களின் திறமைக்குச் சான்று பகர்வதாக உள்ளது. ஒரு நாளில் எட்டுத் தேர்களைச் செய்து முடிக்கவல்ல திறங்கொண்ட ஒரு தேர்த்தச்சன் (சிற்பி) தேர் உருளியின் கால் ஒன்றினைச் செய்ய ஒரு மாதகாலம் எடுத்துக் கொண்டு செய்துமுடித்த தேர்க்காலை ஒத்த வலிமை மிக்கவன் அதியமான் என்னும் கருத்தில்

*'வைகல்*
*எண்தேர் செய்யும் தச்சன்*
*திங்கள் வலித்த காலன் னோனே'* (புறம் 87:2-4)

என்று குறிப்பிட்டுள்ளார்,

இளம்பருவத்தில் சிற்றில் அமைத்துச் சிறுமியர் விளையாடுவதும், சிறுவர்கள் சிறுதேர் உருட்டி விளையாடுவதும் பண்டைய மரபு;அதனை இன்றும் கூட அவர்கள் அயரும் விளையாட்டுக்களில் காணலாம். இதன் தொடர் விளைவினைப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் சிற்றிற் பருவமாகவும் சிறுதேர்ப்பருவமாகவும் அமையக்காணலாம். பிற்காலத்தில் தேர் ஊர்ந்து சென்று மன்னர்க்குரிய வினைமுடிக்க வேண்டி

வீரரின் கடமைநினைந்து, பெற்றோர் தம் மழலைச் சிறுவர்க்கு நடைபயிற்றுவிக்க, அவர்கள் தாமே உருட்டியும் இழுத்தும் செல்லும் முக்கால் தேரினைச் செய்து தந்துள்ளனர். தேர் செய்யும் கலை வல்ல மரத்தச்சர்(மரச்சிற்பியர்) குடும்பத்தில் தோன்றிய இளைஞர்கள், தந்தை வழியாகப் பெற்ற அக்கலைத் திறமையால், பிறர் விரும்புமாறு செய்த ஊராத் தேரினைச் (ஏறிச்செல்வதற்கு உரிய தல்லாத, குதிரை பூட்டி இழுக்கப்பெறாத) சிறுவர்கள் தாமே உருட்டி விளையாடியதனைப் பெரும் பாணாற்றுப்படை (248,249) கூறுகின்றது. இதனால், சிற்பம் முதலிய கலைஞானம், ஒருவருக்கு மரபுவழியாக - பரம்பரையாக அமைந்தமையினை உணரலாம். செல்வக் குடும்பங்களில், இளஞ்சிறார், ஊரா நற்றேரினை உருட்டி விளையாடியதனைப் 'பொற்காற் புதல்வர் புரவியின்றுருட்டும் முக்காற் சிறுதேர்' (பட்டினப். 24,25) எனவும், 'கால் வல் நெடுந்தேர் கையின் இயக்கி நடை' பயின்று புதல்வன் வரும் (கலி:81:8) எனவும் வரும் பகுதிகளால் உணர்தல் கூடும். கலித்தொகைத் தலைவியொருத்தி, தளர்நடை பயிலும் தன் மழலையை, மணிகள் பதித்துச் செய்யப்பட்ட பொம்மை யானையை இழுத்து வருமாறு கூறி வேண்டுவதனைக் ''கவழம் அறியா நின் கை பின் வேழம் .... பைப்பய வாங்கி.... வருக'' எனும் பகுதியால் அறியலாம்(கலி. 80: 6-9)

தொகை நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்களிலும், அத்தொகை நூல்கள், பத்துப் பாட்டு ஆகியவற்றின் செய்யுட்களில் பலவிடங்களிலும், பல தெய்வ உருவங்கள் பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. அவ்வுருவ வண்ணனைகள் அவற்றைப் பாடிய புலவர்களின் தனிக்கற்பனைகள் என்று கூறவியலாது. அவர்கள் படித்துணர்ந்த வகையாலோ, ஓவியமாக, சிற்பமாகப் பார்த்துணர்ந்த வகையாலோ, படைக்கப் பட்டனவாதல் வேண்டும். அக்குறிப்புக்கள், பிற்காலத்தில் தோன்றிய கலைப்படைப்புக்கள் தோன்றக் காரணங்களாகவும் இருந்திருத்தல் கூடும். ஆனால், அப்புலவர்கள் தம் இலக்கியங்களில் வரைந்து காட்டியுள்ள சொல்லோவியங்கள் தவிரப் பிறவகையிலமைந்த கலைப்படைப்புக்கள் எவற்றையும் இன்று காணுமாறில்லை, ஓவியங்களும் சுதைச்சிற்பங்களும் அழிந்தநிலையில், அவற்றை நினைவு படுத்தும் வகையில் தம் இயற்றமிழ்ப்பாக்களில், அக்கலைகள் பற்றிய குறிப்புக்களைப் பேணிக் காட்டியுள்ள அவ்வியற்றமிழ்ப் புலவர்கட்குத் தமிழகம் கடமைப்பட்டுள்ளது.

சொல்லோவியத்தில் அப்புலவர்கள் வெளிப்படுத்தியுள்ள வண்ணங்களும் வடிவங்களும், அக்கலைப் படைப்புக்களைப் பிற் காலத்தே படைக்க முற்படுவோர்க்கு மாற்றமுடியாத சட்டங்களாக

அமைந்து விளங்குகின்றன. வண்ணத்தை எடுத்துக் கொண்டால் சிவன் செந்நிறமுடையவன் என்பதனை, எரி யெள்ளுவன்ன நிறத்தன்' (பதிற்), செவ்வான் அன்ன மேனி' (அகம்) என்று கடவுள்வாழ்த்துப் பாடல்கள் கூறும். சிவனை வண்ண உருவில் காட்ட முற்படும் எவரும் பிற நிறங்களில் காட்ட முற்படுவதில்லை. அவனது கழுத்தின் நிறம் நீலம் (நீலமணிமிடற்று ஒருவன்) என்பதனை எவரும் மாற்றிக்காட்ட முற்படார். சிவபெருமான் தேவியாகிய உமையம்மை நீலநிறங் கொண்டவள் என்பதனை 'நீலமேனிவாலிழை' (ஐங்குறு), என்று கூறப்பட்டுள்ளதனை எவரும் பிறவண்ணங்களில் வடிக்கமாட்டார். முருகன் செந்நிறம் உடையவன் என்பதனைப் 'பவளத் தன்ன மேனி' யோன் (பரிபா) என்றும், 'நீலநிற உருவின் நேமியோன்' (புறம். 58: 15) என்றும், பலதேவனைப் 'பால் நிற உருவிற் பனைக்கொடியோன்' (புறம் 58:14) என்றும் கூறப் பட்டுள்ளதனைப் பின்வந்தோர் மாற்றமுற்பட்டிலர்.

வடிவை நோக்குகின்றபோது, சிவன், கொன்றை மாலையன், இமையா நாட்டமுடையோன், பிறை சூடியவன், புலித்தோலுடையன், நீலமணிமிடற்றன், மாதொரு பாகன், சூலம் பிடித்தோன் என்றெல்லாம் கூறப்பட்டுள்ளதனைப் பின்வந்தோர் அவ்வாறே கொண்டு வரையவும், வடிக்கவும் முற்பட்டனர். முருகன் அறுமுகனாய் விளங்கும் தன்மையை நக்கீரர் கூறிய பாங்கினை ஒத்தே, வடிப்பாராயினர். திருமாலின் கோலங்களும் அவ்வாறே அமைக்கப்பட்டன. இவையனைத்தும் சைவ, வைணவ ஆகமங்களில் குறிப்பிட்டுள்ளவற்றையே கூறப்பட்டன என்று இற்றை நாளில் சைவ வைணவ சமயப்பற்றாளர் கூறுவர். அவர்கள் ஆகமங்கள் இறைவன் அமைத்தன என்றும் கூறுவர். அது பற்றிய திறனாய்வு ஈண்டைக்கு வேண்டுவதின்று. சங்கப்புலவர்கள் குறிப்பிட்ட தெய்வ வடிவங்களும், அவற்றிற்குரிய வண்ணங்களும் பின்வந்தவர்களால் போற்றப்பட்டன என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். இத்தெய்வங்கட்கும், பின்னர்த்தமிழகத்தில் செல்வாக்குப் பெற்ற புத்த சமண முனிவர்கட்கும் கோட்டங்களும் சிற்பங்களும் அமைக்கப்பட்டவாற்றைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது.

மக்கள் நலத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்ட மானிடவாழ்வில், தெய்வங்களை அடிப்படையாகக் கொண்ட சமயங்களின் செல்வாக்குப் பெருகிய நிலையில், அரண்மனை முதலிய கொண்டு விளங்கிய மன்னர் வாழ்வின் அமைப்பு நிலைகள் தெய்வங்கள் உறையும் இடங்களுக்கு உரிமைப்படுத்தப்பட்டன. அதன் பயனாக அரண்மனைக்கும் ஆலயத்திற்கும் கோயில் என்பது பொதுப் பெயரா[illegible]றையோடமைந்த திருக்கோயில் அமைப்பு விரிவுற்று

மண்டபங்கள் திருச்சுற்றுக்கள் போல்வன தோன்றலாயின. அரண்மனை வாழ்வில் இடம் பெற்ற துயிலெடை நிலை முதலிய அரண்மனைச் சடங்குகள், திருக்கோயில்களில் திருப்பள்ளி எழுச்சி முதலிய நடபடிகளாய்த் தொடரலாயின. அவ்வகையில் அரசர்க்குரிய தேர்கள், ஆலயங்கட்கும் உரியனவாய்த் திருக்கோயில் உற்சவ மூர்த்தியின் திருவிழாக் காலத்தில் திருவீதி உலா வருவதற்கு முன்னோடிகளாக அமைந்து இன்றும் வழக்கிலுள்ளன.

இசை என்னும் கலைக் குடும்பத்துள் 'கொட்டாட்டுப் பாட்டு' எனப்படும் கொட்டு(தாளம்), ஆட்டு, (நடனம்), பாட்டு (பண்ணிசைப்பாட்டு) அடங்குமாறு போன்று சிற்பக்கலைக் குடும்பத்துள் ஓவியம், புனையா ஓவியம், புடைச்சிற்பம், சிற்பம் ஆகியன அடங்கும். இப்பிரிவுகளை அடக்கிய கலையாகச் சிற்பக்கலை உள்ளது என்பதனைக் கருதி, அவற்றை உருவாக்குவதற்கான பொருட்களைப் பட்டியிட்டுப் பிற்காலத்தில் தோன்றிய திவாகரம் போன்ற நிகண்டுகள் கூறலாயின. பல்லவர் காலத்தில் உருவானது என்று கருதப்படும் கல்(பாறை) அப்பட்டியலுள் முதலில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

*'கல்லும் உலோகமும் செங்கலும் மரமுடன்*
*மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்*
*கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை*
*பத்தே சிற்பத் தொழிற் குறுப்பாவன'* - (திவாகம்.12,ல் பெயர்க் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி.)

சிற்பச் சார்புடைய பொருட்கள் கிழியிலும் (சீனா-துணி), கிடையிலும் கிடேச்சு(தக்கை போலும் மரப்பொருள்)எனும் பொருளினும் செய்தல் உண்டு என்பதனைக் 'கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கி' என்னும் சிலப்பதிகாரப் பகுதியாலும் (சிலப். 5-33), 'கிழிகிடை என்பவற்றாற் புட்பம் வாடா மாலை முதலிய உருப்பிக்கும் தொழில்' என்றும், 'இனி, கிழியாற் படிமை முதலியவும், கிடையால் விலங்கு பறவை, பூ, பூங்கொத்து முதலியவும் அமைப்போரும்' என்றும் கூறிய அடியார்க்கு நல்லார் உரையாலும் அறியலாம். சிலம்பிற்குப் பிற்பட்ட திவாகரம் இவற்றைச் சிற்பத் தொழிலுறுப்புப் பட்டியலுள் ஏனோ சேர்க்காது விட்டது.

சங்கநூல்கள் தரும் சிற்பக் கலைக்குறிப்புக்களை நோக்குங்கால், பிறநாடுகளில் நிகழ்ந்த சிற்பக் கலைம... சிக்குச் சிறிதும் பின்வாங்காது முன்னிலையில் தமிழகம் விளங்கியவ... றை உணரலாம்.

# யானைமலை நரசிங்கப் பெருமாள் கோவில்

பேரறிஞர். வெ. வேதாசலம்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இக்கோயில் தோற்றுவித்ததை முதல் வரகுணபாண்டியனான பராந்தகநெடுஞ்சடையனின் கல்வெட்டே இங்குள்ள கல்வெட்டுகளில் பழமையானதாகும். இதனையடுத்து கி.பி.பத்தாம் நூற்றாண்டில் பாண்டிநாட்டைக் கைப்பற்றிய முதற்பராந்தசோழனின் கல்வெட்டுக் காணப்படுகிறது. பாண்டியர் தலைநகரைப் பராந்தகசோழன் கைப்பற்றியதால் 'மதிரைகொண்ட கோப்பரகேசரி' என்று அழைக்கப்பட்டான். இதனைத் தெரிவிக்கும் இவனது முப்பத்து மூன்றாவது ஆட்சியாண்டு(கி.பி.940) வட்டெழுத்துக் கல்வெட்டு நரசிங்கப்பெருமாள் குடைவரைக்கு வடபுறமுள்ள பாறையில் பொறிக்கப்பட்டுள்ளது.[5] இக்கல்வெட்டு கி.பி.940 ல் ஏற்பட்ட சூரியகிரணத்தன்று பராந்தகசோழனின் அதிகாரியான சோழநாட்டுப் புறங்கரம்பை நாட்டைச் சார்ந்த மருதூர் மருதூருடையானான அருணிதிகலியன் செய்த தானம் பற்றித் தெரிவிக்கிறது. பராந்தகசோழன்காலத்தில் இவனால் திருவானைமலை நரசிங்கப்பெருமானடிகளுக்கு இறைநீக்கி இருவேலி நிலம் அளிக்கப்பட்டது. ஊருடையான் குளமான கலியனேரி என்ற குளமும் தானமாகத் தரப்பட்டது. இக்குளத்திலிருந்து நீர்பாயும் இருவேலி நீர்நிலத்திலிருந்து ஆண்டுதோறும் வந்த முப்பதுகலம் நெல்லில் பாதியளவு (15கலம்) நரசிங்கப்பெருமாளுக்கு மூன்று சந்தியும் திருவமுது படைப்பதற்குக் கொடுக்கப்பட்டது. எஞ்சியுள்ள பாதிநெல் நரசிங்கப்பெருமாள் 'உத்தம அக்கிரமாக' திருவமுது (மிகவுயர்தரமுள்ள திருவமுது) படைக்கும்போது வேதம் ஓதும் ஐந்து பிராமணர்களுக்கு உணவு அளிக்கப்பட்டது. இதன்படி ஒவ்வொரு பிராமணர்க்கும் உணவிற்காக இருநாழி அரிசியும் மூன்றுவகைக் காய்கறியும் நாழித்தயிரும் செவிடளவு நெய்யும் இரண்டு வெற்றிலையும் அளிக்கப்பட்டன. சமைப்பதற்கும் உண்பதற்கும் உரிய பாத்திரங்களில் தாலம் என்ற வகையில் ஐந்தும் வட்டிலில் ஐந்தும் ஒட்டுட்டி சட்டுவம் ஆகியவற்றில் ஒன்றுமாகப் பல பாத்திரங்கள் தரப்பட்டன. இவ்வுணவைச் சமைக்கும் அடுவான் ஒருவனுக்குச் சம்பளம் ஒருநாளைக்கு ஐந்துநாழி நெல்லும் ஆறு திங்களுக்கு ஒருமுறை ஆடையும் (புடவை) கொடுக்கப்பட்டன. கற்கடகஞாயிற்று வெள்ளிக்கிழமை பெற்ற ஆயில்ய

நச்சத்திரத்தன்று சூரியகிரணம் வந்த நாள்முதல் இத்தானம் நடைபெறுவதற்கு ஆணை வழங்கப்பட்டது. இக்கோயிலில் சிரிகாரியம் ஆராய்கின்ற திருவாய்பாடி நாராயணனும் நரசிங்கமங்கலத்து ஊர்ச்சபையாரும் இத்தானத்தைப் பொறுப்பேற்று நடத்தவேண்டும். இதனை இவ்விருவரும் நடத்தத்தவறினால் அதற்குத்தண்டனையாக ஆன்றாள் அரசனுக்கு இரண்டுகாசுகள் தண்டக்காசுகளாகச் செலுத்தவேண்டும். அக்காசு கொண்டு கோயிலுக்குத் திருவிளக்கு எரிக்கவேண்டும். ஊர்ச்சபையார் இக்காரியத்தில் தவறி நடந்தால் ஆறுகாசுகள் தண்டமாகத் தரவேண்டும் என்று பராந்தகசோழனின் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கல்வெட்டில் ஈழக்காசு, புத்தக்கம் என்று பெயர்கொண்ட காசுகள் குறிப்பிடப்படுகின்றன. ஏழரைப்புத்தக்கம் ஒரு ஈழக்காசிற்குச் சமமானதாக இருந்தது.

பதினோராம் நூற்றாண்டில் முதல் இராசேந்திரசோழன் புதல்வர்கள் 'சோழபாண்டியன்' என்ற பெயரில் சோழரின் பிரதிநிதியாகப் பாண்டியநாட்டு ஆட்சியை மேற்கொண்டனர். அவர்களில் முதலாவதாக ஆட்சிபுரிந்தவன் சடையவர்மன் சுந்தரசோழபாண்டியன் (கி.பி.1021-1051) ஆவான்.[6] இவனது இருபத்திரண்டாவது ஆட்சியாண்டிற்குரிய (கி.பி.1042) இரண்டு கல்வெட்டுகள் நரசிங்கப்பெருமாள்கோயிலை ஒட்டிய பாறையில் தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. சுந்தரசோழபாண்டியனின் இக்கல் வெட்டுக்களில் ஒன்று திருவானைமலை மேல் எழுந்தருளிய நரசிங்கப்பெருமாளுக்கு ஆழாக்கு நெய் கொண்டு விளக்கெரிப்பதற்காக இரணியன்சோலை என்பவன் இருபத்தைந்து ஆடுகள் அளித்தான் என்றும் அவற்றை இக்கோயில் வெட்டிக்குடி(இடைக்குடி) இடையன் நக்கன் செண்பகத்தேவன் பெற்றுக் கொண்டு விளக்கு எரிப்பதற்கு எண்ணை அளந்து வந்தான் என்றும் தெரிவிக்கிறது. இம்மன்னனது மற்றொரு கல்வெட்டு நரசிங்கப்பெருமாளுக்கு இறையான் அரைசூர் சேந்தன்பட்டன் மனைவி தத்தன்சேந்தி என்பவள் நந்தாவிளக்கு ஒன்று எரிப்பதற்காகத் தானம் தந்துள்ளதைக் கூறுகிறது. இக்கல்வெட்டு இக்கோயிலை 'இராஜராஜபாண்டிநாட்டு இராசேந்திரசோழ வளநாட்டு கீழ்இரணியமுட்டத்து திருஆனைமலை எழுந்தருளி இருந்த ஸ்ரீநரசிங்க ஆழ்வார்' கோயில் என்று குறிப்பிடுகிறது.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த சடையவர்மன் ஸ்ரீவல்லபபாண்டியனின் (கி.பி.1101-1124) இரண்டு கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன.அவற்றில் ஒன்று அவனது ஐந்தாவது ஆட்சியாண்டைச் சார்ந்தது. இது 'திருமடந்தையும் ஜயமடந்தையும்'

என்ற அவனது மெய்க்கீர்த்தியுடன் வேலூர்குளக்கீழ் என்ற நாட்டில் உள்ள குந்தவைச் சதுர்வேதிமங்கலத்தில் நரசிங்கப்பெருமாள் கோயிலுக்காகத் தானம் அளித்ததைக் கூறுகிறது. இம்மன்னனின் ஆறாவது ஆட்சியாண்டைச் சார்ந்த மற்றொரு கல்வெட்டிலிருந்து தொண்டைமண்டலத்தைச் சேர்ந்த ஆபத்தம்ப சூத்திரத்து கந்தாடை காளமேகப்பட்டன் என்பவன் துர்க்காபகவதிநல்லூரில் நீர்நிலத்தில் (இரண்டே எட்டுமாவில்) ஒரு பகுதியைத் தானம் அளித்ததை உணரமுடிகிறது.

இக்கோயிலில் உள்ள பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகள் முழுமையற்ற நிலையிலேயே உள்ளன. இவற்றில் ஒன்றில் முதல்மாறவர்மன் சுந்தர பாண்டியனின்(கி.பி.1216-1238) மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இது அவனது சோழநாட்டு வெற்றியைக் கூறுகிறது. இவனது காலத்தினைச் சார்ந்த மற்றொரு கல்வெட்டு திருவானைமலை வீற்றிருந்த நரசிங்கஆழ்வார் வீதியுலா புறப்பட்டருள திருப்படிமாற்று உள்ளிட்ட நிவந்தங்களுக்கு வரி நீக்கிய இறையிலியாக இயக்கிமங்கலத்தில் நிலம் தந்ததைத் தெரிவிக்கிறது.

விசயநகரப்பேரரசின் பெருவேந்தனாக விளங்கிய கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டு ஒன்றும் நரசிங்கப்பெருமாள் கோயில் மகாமண்டபத்தில் உள்ளது. இக்கல்வெட்டு சகஆண்டு 1441 - ல் (கி.பி.1529) பொறிக்கப்பட்டுள்ளது. அரசனின் வாசல்காரியமாக விளங்கிய திம்மபூபனையும் அவனது அலுவலராக மதுரையில் இருந்த இராமநாதன் பற்றியும் கூறுகிறது. நரசிங்கப் பெருமாள் கோவில் மகாமண்டபம் கிருஷ்ணதேவராயரின் காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

கி.பி.1892 - ல் நந்தன ஆண்டில் ஆவணி மாதத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றும் நரசிங்கப்பெருமாள் குடைவறைத் தூணில் உள்ளது. இது இக்குடைவறையில் உமாபதி அய்யன் என்பவர் இரும்புக்கம்பி ஜன்னல் அமைத்ததைத் தெரிவிக்கிறது.

## அடிக்குறிப்புகள்

1. South Indian Inscriptions Vol.XIV Nos.1,2,98, 168,169,211, SII. Vol. III.p.240; ARE. 455/ 1906.
2. SII. Vol.XIV No.98
3. SII.Vol.XIV Nos. 1,2.
4. ARE. No. 455/1906.
5. SII.Vol.III.p.240.
6. என்.சேதுராமன், பாண்டியர் வரலாறு, கும்பகோணம்(1989) பக்.28-29.

# மதுரை கூடலழகர் பெருமாள் கோயில் கல்வெட்டுகள் தரும் வரலாறு

பேரறிஞர். வெ. வேதாசலம்,

கூடலழகர்கோயிலில் அஷ்டாங்கவிமானத்தின் அடித்தளம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களில் உட்புறம், பெரியதிருச்சுற்றுச்சுவர் ஆகிய இடங்களில் பல கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் இக்கோயில் தொடர்பான ஐந்து தமிழ்க்கல்வெட்டுகள் அஷ்டாங்கவிமானத்து அடித்தளத்திலும், அதன் முன்புள்ள மண்டபங்களிலும் உள்ளன. ஆனால் பெரியதிருச்சுற்றுச்சுவரில் நாற்புறமுமுள்ள ஏராளமான முழுமையற்ற துண்டுக்கல்வெட்டுகள் இக்கோயிலுக்கு உரிய கல்வெட்டுகளாகத் தோன்றவில்லை.

## காலம்

கூடலழகர்கோயிலுக்குரிய கல்வெட்டுகளாக இன்று இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள் ஐந்தும் கி.பி.1500க்குப் பிறகு பொறிக்கப்பட்ட விசயநகரவேந்தர், மதுரை நாயக்கர் காலங்களைச் சார்ந்தவையாகும். இவற்றில் முதலிரு கல்வெட்டுகள் கி.பி.1551, 1555-56 ஆம் ஆண்டுகளுக்குரிய விசயநகரமன்னன் சதாசிவராயர் (கி.பி.1542-70) காலத்தவையாகும். பிற கல்வெட்டுகளில் ஆண்டுக்குறிப்பு காணப்படவில்லை. அவற்றின் எழுத்தமைதியைக் கொண்டு அவற்றில் இரு கல்வெட்டுகளை கி.பி.16ஆம் நூற்றாண்டுக்குரியவை என்றும், எஞ்சிய மற்றொன்றை கி.பி.-18ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றும் கூறலாம். இக்கல்வெட்டுகள் இக்கோயிலுக்குச் செய்யப்பட்ட கட்டடத் திருப்பணிகள், வழிபாட்டிற்கு அளிக்கப்பட்ட தானங்கள் குறித்துத் தெரிவிக்கின்றன.

## பழைய கல்வெட்டுகள்

பழம்பெருமை படைத்த இக்கோயிலில் கி.பி.பதினாறாம் நூற்றாண்டிற்கு முன்புள்ள கல்வெட்டுகள் இன்று இல்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. இந்நிலையே மதுரையிலுள்ள பழைய கோயில்களில் பலவற்றில் காணப்படுகிறது. மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்திலுள்ள கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் போன்ற பகுதிகளில் கூடலழகர்பெருமாள் கோவிலைப் போன்றே முற்காலப், பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகள் காணப்படவில்லை.

பிற்காலப்பாண்டியர் காலத்திற்குப் பின்னர் மதுரை அன்னியரின் பல படையெடுப்புக்களுக்கு ஆளாகி அழிவுக்குள்ளானது. கோயில்களில் வழிபாடு நின்று பராமரிப்பு இல்லாமல் போனது. இவ்வழிவுப்பாதையிலிருந்து மதுரைக் கோயில்களைப் பாண்டியர்க்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த விசயநகரவேந்தர்கள், மதுரை நாயக்க மன்னர்கள் மீட்டனர். மீனாட்சியம்மன்கோவில், கூடலழகர்பெருமாள் கோவில் போன்ற கோயில்களின் பழைய விமானங்களை முற்றிலுமாகப் பிரித்தெடுத்துவிட்டுப் பெரிய அளவில் அவற்றை எடுத்துக் கட்டினர். இதனால் பிற்காலத்தில் நடைபெற்ற திருப்பணிகளின் போது அவற்றில் பொறித்திருந்த பழமையான கல்வெட்டுகள் அழிந்துவிட்டன. விசயநகர, நாயக்கமன்னர்களின் திருப்பணிகளையும் தானங்களையும் தெரிவிக்கும் புதிய கல்வெட்டுகள் புதிய கட்டுமானங்களில் இடம்பெற்றன. இதனால் கூடலழகர்கோயில் போன்ற பழமையான கோயில்களில் பிற்காலக் கல்வெட்டுகளையே காணமுடிகிறது. முற்காலப் பாண்டியர், சோழர் கல்வெட்டுகளைக் காணமுடியவில்லை. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் கூடலழகர்கோயில் தாயார் சன்னதி திருத்திக்கட்டப்பட்ட போது அப்பகுதியில் இருந்த பழமையான கல்வெட்டுகள் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவை அடையாளம் தெரியாமல் மறைந்தன.

## திருச்சுற்றுச்சுவரில் பழைய கல்வெட்டுகள்

மதுரையைச் சுற்றியிருந்த கிராமப்பகுதிகளில் இருந்த பாண்டியர்காலக் கோயில்களும் காலப்போக்கில் அழிவுக்குள்ளாகின. அந்நிலையில் அவற்றின் கற்களை எடுத்துவந்து கூடலழகர்கோயிலின் பெரிய திருச்சுற்றுச் சுவரினைக் கட்டுவதற்குப் பயன்படுத்தியுள்ளனர். அக்கோயில்களில் இருந்த கல்வெட்டு பொறிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான கற்கள் தொடர்பில்லாமல் இத்திருச்சுற்றுசுவரில் வைத்துக் கட்டப்பட்டுள்ளதை இன்றும் காணமுடிகிறது. இக்கல்வெட்டுகளை ஆய்வுசெய்து படித்தபோது இவை வெளியூர் கோயில்களிலிருந்து எடுத்து வரப்பட்டவை என்பதை அறியமுடிந்தது. இவை சோழவந்தான் பகுதியிலிந்து அழிந்துபோன சிவன்கோயில், பெருமாள்கோவில்களுக் குரிய கல்வெட்டுகளாகும். இவற்றில் பெரும்பாலானவை கி.பி.13,14ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகளாகும். ஒருசில கல்வெட்டுகள் கி.பி.12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இடைக்காலப் பாண்டியர் காலத்தவையாகும். இன்னும் சில கி.பி.11ஆம் நூற்றாண்டில் பாண்டிநாட்டில் ஆட்சிபுரிந்த சோழர்காலக் கல்வெட்டுகளாகும். இக்கல்வெட்டுகள் அனைத்தும் முழுமையற்ற

நிலையில் தனித்தனியாகச் சிறுசிறு துண்டுக் கல்வெட்டுகளாகவே இருக்கின்றன.

பிற்காலப்பாண்டிய மன்னர்களின் மெய்க்கீர்த்திகளையும் பலநாடுகளைச் சேர்ந்த அவர்களது அதிகாரிகளின் பெயர்களையும் இக்கல்வெட்டுகளில் காணமுடிகிறது. மாறவர்மன் சுந்தரபாண்டியன், குலசேகரபாண்டியன் போன்ற பெருமன்னர்களின் பெயர்கள் இவற்றில் வருகின்றன. இங்குள்ள கல்வெட்டுகளில் பெரும்பாலானவை சோழவந்தான், தென்கரை ஊர் பகுதிகளிலிருந்த கோயில்களுக் குரியவையாகும். ஏனென்றால் இவற்றில் பாகனூர்க் கூற்றத்தில் அமைந்திருந்த சோழாந்தகச் சதுர்வேதிமங்கலம் (சோழவந்தான்) அடிக்கடி குறிப்பிடப்படுகின்றது. மேலும அப்பகுதியில் இருந்த கோயிலுக்குத் தானமாகத் தரப்பட்ட நிலங்களின் எல்லைகளைப் பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இக்கல்வெட்டுகள் மூலம் சோழவந்தான் பகுதியில் இருந்த கோயில்களுக்குத் திருவமுது, சிறுகாலைசந்தி போன்றவற்றிற்குப் பலர் அளித்த கொடைகளைப் பற்றி அறியமுடிகிறது. இவற்றில் ஒரு கல்வெட்டு சிவன்கோயில் ஒன்றில் விநாயகப் பிள்ளையாரை எழுந்தருளுவித்ததைக் கூறுகிறது.

கூடலழகர்பெருமாள்கோயில் திருச்சுற்றுச்சுவர் கல்வெட்டு களிலிருந்து சோழவந்தான் மற்றும் பிறபகுதியிலிருந்து மூன்று கோயில்களின் பெயர்களைக் கண்டறிய முடிகிறது. 'வானவஈஸ்வரமுடைய நாயனார்கோயில்' 'திருக்கண்ணமங்கலமுடைய மகாதேவர்கோயில்' என்றழைக்கப்பட்ட இரண்டு சிவன்கோயில்களின் பெயர்களும் 'ஸ்ரீவல்லபவிண்ணகரம்' எனப்பட்ட பெருமாள்கோவிலின் பெயர் ஒன்றும் இங்குள்ள கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. எனவே இக்கல்வெட்டுகளில் பெரும்பாலானவை இம்மூன்று கோயில்களுக்குரியவையாக இருக்க வேண்டும். 'ஸ்ரீ வல்லபவிண்ணகரம்' கி.பி.12ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆட்சிபுரிந்த இடைக்காலப்பாண்டியன் சடையவர்மன் ஸ்ரீவல்லபனின் (கி.பி.1101-1129) காலத்தில் அவனது பெயரால் தோற்றுவிக்கப்பட்ட கோயிலாகும். இது சோழவந்தானுக்கு அருகில் வைகையாற்றின் மேல்கரையில் அமைந்திருந்தது. இங்குள்ள கல்வெட்டுகளிலும் இது 'மேல்கரை ஸ்ரீவல்லபவிண்ணகரம்' என்றே குறிப்பிடப்படுகிறது. இக்கோயில் காலத்தின்கோலத்தாலும் வைகையாற்றின் வெள்ளத்தாலும் அளிந்தநிலையில் இதன் கல்வெட்டுப் பொறித்த கட்டடக்கற்களும், தூண்களும் பிறஇடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பல ஊர்களில்

கோயில்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஸ்ரீவல்லபவிண்ணகரத்திற்குரிய அதற்கு அளிக்கப்பட்ட தானங்களைத் தெரிவிக்கும் கல்வெட்டுப் பொறித்த மண்டபத் தூண்கள் தென்கரை மூலநாதசுவாமிகோவில் முன்மண்டபத்திலும் இருப்பதை இன்றும் காணலாம். இதுபோன்று கல்வெட்டுப் பொறித்த கட்டடக்கற்கள் இடம்மாறி வந்திருப்பதைத் தமிழ்நாட்டில் பல இடங்களில் பார்க்கமுடிகிறது.

## கூடலழகர்கோயில் கல்வெட்டுகள்

தென்னிந்தியாவில் பாண்டியர், சோழர், போசளர், காகதீயர் போன்ற பெருமன்னர்களின் ஆட்சிக்குப் பிறகு இந்துசமயத்தைக் காக்க வேண்டும் என்ற நோக்கில் துங்கபத்திரை ஆற்றங்கரையில் தோற்றுவிக்கப்பட்டது விசயநகரப் பேரரசாகும். இதன் பெருமன்னர்களாக விளங்கிய கிருஷ்ணதேவராயர், அச்சுதராயர் காலத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர் சதாசிவராயர்(கி.பி.1542-70) ஆவார். இவரது காலத்தில் அவரது தட்சிண மண்டலாதிபதியாக இராமராசவிட்டல மகாதேவராயர் விளங்கினார். அவருக்குக் கீழ் பணிபுரிந்த அதிகாரியாக வசவணநாயக்கரின் மகன் திம்மப்பநாயக்கர் இருந்தார். அப்போது மதுரையில் விசயநகரவேந்தருக்குக் கட்டுப்பட்டு விசுவநாதநாயக்கர் மதுரை நாயக்க மன்னராக ஆட்சிசெய்து கொண்டிருந்தார். இவர்கள் காலத்தில் திருவடிராச்சியத்தில் ஆட்சிபுரிந்த சேரநாட்டு மன்னர்களை அடக்குவதற்கு மதுரை வழியாக விட்டலதேவராயர் தலைமையில் பல படையெடுப்புகள் நடைபெற்றன. அவற்றில் கிடைத்த வெற்றிக்குப் பின்னர் மதுரை, திருமோகூர் போன்ற இடங்களில் இருந்த வைணவக் கோயில்களைப் புதுப்பித்து அவற்றின் வழிபாட்டிற்கு ஏராளமான தானங்களை விட்டலதேவராயரும் அவருக்குக் கீழ் பணிபுரிந்த திம்மப்பநாயக்கர், எல்லப்பநாயக்கர் ஆகியோரும் செய்தனர். இதனை மதுரைப்பகுதியிலுள்ள கோயில்களின் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. விட்டலதேவராயர், திம்மப்பநாயக்கர் போன்றோரின் உருவச்சிலைகள் மதுரைக் கூடலழகர் கோயிலில் உள்ளன.

## திம்மப்பநாயக்கர் கொடை

தட்சிண மண்டலாதிபதியான இராமராச விட்டலதேவராயரின் அதிகாரியாக விளங்கிய திம்மப்பநாயக்கர் மதுரைப்பகுதியில் மீண்டும் வைணவசமயம் தழைத்தோங்குவதற்குப் பல அரியபணிகள்

செய்துள்ளார். இவர் கி.பி.1551-ல் திருமோகூர் காளமேகப் பெருமாள்கோவிலில் நாள்தோறும் நைவேத்தியம் திருவாராதனை சிறப்புற நடைபெறுவதற்கு மதுரைமண்டலத்தில் பல கிராமங்களை விட்டுக்கொடுத்துள்ளதை அங்குள்ள இரண்டு கல்வெட்டுகள் கூறுகின்றன. இவற்றில் ஒன்று அரசனது ஆணையாகவும் மற்றொன்று காளமேகப்பெருமாளே வழங்கிய ஆணையாகவும் திருமோகூர்கோயில் மகாமண்டபத்தில் கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன. (எம்.இ.ஆர். எண் 76/1905)

இதேகாலத்தினைச் சேர்ந்த இதேபோன்ற கல்வெட்டுகள் கூடலழகர்பெருமாள்கோவிலிலும் காணப்படுகின்றன. (MER.NOS. 557,558,559/1911) விசயநகரவேந்தரின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் கி.பி.1551-ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று கூடலழகர்கோயில் அஷ்டாங்கவிமானத்தின் அடிப்பகுதியில் உள்ளது. தனது தலைவராக விளங்கிய இராமராசவிட்டலதேவராயருக்குப் புண்ணியமாகத் திம்மப்பநாயக்கர் 'சந்தோபசௌந்தரரான கூடலழகியப் பெருமாளுக்கு நித்தியப்படி நைவேத்தியத்திற்கும் தசமித்திருநாள் கட்டளைக்குமாக மதுரைமண்டலத்தில் இருந்த பலவூர்களைத் தானமாக அளித்ததை இக்கல்வெட்டின் முற்பகுதி கூறுகிறது. இதன்பிற்பகுதி இவ்வறக்கட்டளையை கூடலழகப்பெருமாளே திருவுள்ளம் மகிழ்ந்து திருவாய்மலர்ந்தருளி ஆணையாக உறுதிசெய்து அளித்தார் என்று தெரிவிக்கிறது. 'கூடல்அழகிய பெருமாள் மரகதமணிமண்டபத்தில் மாணிக்கக்கட்டிலில்' தனது நாச்சியாரோடு திருவோலக்கமாக எழுந்தருளியிருந்தார். அப்போது சுவாமியின் ஸ்ரீகாரியம் செய்பவர்கள் வந்து பெருமாளிடம் விண்ணப்பம் செய்து வேண்டியபடி இவ்வாணையை அளித்ததாகக் கல்வெட்டு கூறுகிறது.

இவ்வாணைப்படி மதுரை மண்டலத்தில் பெருங்குடி உள்பட்ட இரட்டைக்குளம், வண்ணானேந்தல், குமுழங்குளம் முதலிய கிராமங்களும் அவனிநாராயணபுரத்து உட்கிடையான சிந்தாமணி கிராமம், மட்டப்பாறை சீர்மையிலுள்ள முள்ளிப்பள்ளம் கிராமம்,திருப்புவனம் சீர்மையிலுள்ள புல்வாய்க்கரை, அல்லிகுளம், செங்குளம், குண்டுகுளம், பசுமண்குளம் முதலிய கிராமங்களும் தானமாகத் திம்மப்பநாயக்கரால் அளிக்கப்பட்டன. இக்கிராமங்களில் சிலவற்றைத் தவிர பல கிராமங்கள் அதே பெயரிலும் சற்று மருவியும் இன்றும் வழங்குகின்றன. இவற்றில் பெருங்குடி மதுரை விமானநிலையத்திற்கு அருகிலுள்ளது. அதற்கு முன்பாக உள்ள

அவனிநாராயணபுரமே இன்று அவனியாபுரம் என்று வழங்கி வருகிறது. திருப்புவனத்திலிருந்து நரிக்குடி செல்லும் வழியில் அல்லிகுளம், புல்வாய்க்கரை போன்ற கிராமங்கள் உள்ளன. முள்ளிப்பள்ளம், சோழவந்தான் பகுதியில் தென்கரை கிராமத்தினை அடுத்துள்ளது. இக்கிராமங்களிலிருந்து ஆண்டுதோறும் வந்த ஆயிரங்கலம் நெல்லும் தொண்ணூறு பொன்னும் நைவேத்தியத்திற்கும் தசமித் திருநாள் கட்டளைக்கும் அளிக்கப்பட்டன. இவ்வறக்கட்டளையை நடத்திவருவதற்கு ஸ்தானிகவினியோகமாகக் கோயிலின் மாடத்திருவீதியில் வீடு ஒன்றும் கொடுக்கப்பட்டது. மேலும் இவ்வூழியத்தினைச் செய்து வருவோர்க்குப் பெருமாளுக்குப் படைக்கப்பட்ட பிரசாதத்திலே நாள் ஒன்றுக்கு முக்குறுணி அமுதுபடி பிரசாதம் அளித்து வரவேண்டும் என்று ஆணை வழங்கப்பட்டது.

## கூடல் அழகியபெருமாள்

மதுரை மாநகரில் திருமாலுக்காக எடுக்கப்பட்ட பழமையான கோயில்கள் பல இன்றும் இருந்துவருகின்றன. ஆனால் கூடல் மாநகரிலுள்ள பெருமாள் என்ற பெயரில் இப்பெருமாளுக்கே பெயர் இருந்து வந்துள்ளனது. இதனை உறுதிப்படுத்தும் முறையில் 'கூடல் அழகியபெருமாள்' என்ற பெயரில் இங்குள்ள கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றார். இப்பெயரே கூடலழகர் என்று வழங்கப்பட்டு தற்போது இக்கோயில் கூடலழகர்பெருமாள்கோயில் என்று வழங்கி வரப்படுகிறது.

## அஷ்டாங்கவிமானம் அர்த்தமண்டபத்திருப்பணி

இராமராசவிட்லதேவர், திம்மப்பநாயக்கர், இம்முடி எல்லப்பநாயக்கர் நிர்வாகத்தின்போது கூடலழகியபெருமாள்கோவிலின் அர்த்தமண்டபத் திருப்பணி நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளதை மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கிறது. அர்த்தமண்டபம் கி.பி.16ஆம் நூற்றாண்டு விசயநகரவேந்தர் காலத்துக் கலைப்பணியிலேயே காணப்படுவதால் அவற்றைத் திம்மப்பநாயக்கர் தமது காலத்தில் செய்து முடித்திருக்க வேண்டும். இதே காலத்திலேயே திருமோகூர் காளமேகப்பெருமாள் கோவிலும் திருத்திக் கட்டித் திருப்பணி செய்யப்பட்டிருக்கிறது. திம்மப்பநாயக்கர் கூடலழகியப்பெருமாள் கோயிலில் ஏற்கனவே சிறிய அளவில் அமைந்திருந்த பாண்டியர் காலத்து அஷ்டாங்கவிமானத்தைத் திருத்தி மிகப்பெரிய அளவில் பெருமாளின் நின்ற, இருந்த, கிடந்த கோலங்களைக் காட்டுகின்ற

வகையில் கட்டியிருக்க் வேண்டும். இதுபோன்ற அஷ்டாங்கவிமானங்கள் பல்லவர்காலத்தில் காஞ்சிபுரம் (வைகுந்தப்பெருமாள்கோவில்) உத்திரமேரூர் (சுந்தரவதனப்பெருமாள்கோயில்) பாண்டியர்காலத்தில் திருக்கோஷ்டியூர் (சௌமியநாராயணப் பெருமாள்கோவில்) சோழர்காலத்தில் மன்னார்கோவில் (இராசேந்திரசோழவிண்ணகரம்) போன்ற பல இடங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அந்த வரிசையில் பாண்டிநாட்டில் விசயநகரவேந்தர் கலைப்பாணியில் தோற்றுவிக்கப்பட்டதே கூடலழகர்கோயில் அஷ்டாங்கவிமானமாகும்.

இத்திருக்கோயில் விசயநகரவேந்தர் காலத்திற்கு முன்பாகவே பாண்டியர்களால் போற்றி வளர்க்கப்பட்ட கோயிலாகத் திகழ்ந்துள்ளது. இதனை இத்திருக்கோயிலுள்ள விசயநகர, நாயக்க மன்னர்கள் காலத்திற்கு முற்பட்ட காலத்தினைச் சார்ந்த செப்புத்திருமேனிகள் (உற்சவத்திருமேனிகள்) உணர்த்துகின்றன. இக்கோயிலில் உள்ள செப்புத் திருமேனிகளில் மிகப்பழமையானவையாக கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராமர், சீதை, இலக்குவன் திருமேனிகள் விளங்குவது இதனை உறுதிப்படுத்துகிறது.

எனவே தொன்றுதொட்டு மிகப்பழமையான காலத்திலிருந்து வந்த இக்கோயிலையே விசயநகரவேந்தர்களும், நாயக்க மன்னர்களும் பிறரும் விரிவுபடுத்திக் கட்டியுள்ளனர் எனலாம். இதனைத் திருத்திக்கட்டும் பெரும்பணி கி.பி.16ஆம் நூற்றாண்டிலேயே நடைபெற்றிருக்கிறது. இதற்குக் கல்வெட்டுகளும் சான்றுகளாக விளங்குகின்றன. அஷ்டாங்கவிமானத்தின் முன்புள்ள அர்த்தமண்டபத்தினை திம்மப்பநாயக்கர் காலத்தில் வாழ்ந்த கந்தாடைகோனமன் என்பவன் கட்டியிருப்பதைத் திம்மப்பநாயக்கர் காலத்து மேற்கண்ட கல்வெட்டு தெரிவிக்கிறது. இதனைக் கந்தாடை அண்ணனுக்குப் புண்ணியமாகக் கந்தாடைகோனமன் செய்து முடித்திருக்கின்றான். இப்பணியைச் செய்துமுடிப்பதற்காக மதுரைக்கல்தச்சர்கள் ஒத்துக்கொண்டு அதற்குக் கூலியாக ஆகும் 1600 பணம் குறித்து ('மதுரை ஆசாரிமார் இட்ட அடங்கல் பட்டோலை படிக்கு கூலிப் பணம்' 1600) ஒப்பந்தமுறி எழுதிக்கொடுத்துள்ளனர். அத்தச்சுக் கூலியில் 1250 பணத்தைக் கந்தாடை அண்ணனுக்குப் புண்ணியமாகக் கந்தாடைகோனமன் அளித்திருக் கின்றார். மேலும் கிட்டாராயர் வகையிலிருந்து 50 பணம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அர்த்தமண்டபத்திருப்பணி கி.பி.16ஆம் நூற்றாண்டில் வரும் பிலவங்க வருசம் (கி.பி.1547-48) புரட்டாசி மாதம் ஆரம்பித்து நளவருசம்(கி.பி.1555-56) ஆனிமாதத்தில்

முடிவடைந்துள்ளது. 'கந்தாடைஅண்ணன்' என்றபெயர் வைணவ வரலாற்றில் இடம் பெற்ற குறிப்பிடத்தக்க பெயராகும். இப்பெயரினைப் பிற்காலத்தில் வாழ்ந்த பலர் சூடிக்கொண்டுள்ளனர் என்பதையும் இக்கல்வெட்டு உணர்த்துகிறது.

கூடலழகியபெருமாளின் கருவறையின் திருநிலைவாயில் திருப்பணியை கி.பி.16ஆம் நூற்றாண்டில் நவமாணிக்கம் அலங்காரப்பட்டர் என்பவர் நிறைவேற்றினார். இதேபோன்று இக்காலத்தில் மகாமண்டபத்தின் திருநிலைவாயில் திருப்பணியை அண்டநாட்டுப் பெருமணநல்லூரில் இருந்த அழகர்தெய்வச் சிலைப்பெருமாள் என்பவன் செய்து முடித்தான். பெருமணநல்லூர் என்பது மதுரையிலிருந்து திருப்புவனம் செல்லும் வழியில் அமைந்த மணலூரின் பழம்பெயராகும். இச்செய்திகளை இரு கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

## நாட்டாண்மைக்காரர் உருவச்சிலை

கூடலழகியபெருமாள் கோவிலில் பலரது உருவச்சிலைகள் உள்ளன. அவை பெருமாளைச் சதாகாலமும் சேவித்து இருகரம் கூப்பி அஞ்சலித்து நிற்கும் அடியார் கோலத்தில் காட்சியளிக்கின்றன. அவற்றில் நவநீதகிருஷ்ணன் சன்னதிக்கு முன்புள்ள தூணுக்கு அருகில் காணப்படும் உருவச்சிலையின் மீது அவ்வுருவம் யார் என்பதைத் தெரிவிக்கும் கல்வெட்டுக் காணப்படுகிறது. கி.பி.17-18 நூற்றாண்டில் மதுரைப் பகுதியில் நாட்டாண்மைப் பணிசெய்து இக்கோயில் இறைப்பணியில் ஈடுபட்ட பெருமாள்நாயக்கர் மகன் அரிசிக்கண்டன் உருவம் இதுவாகும்.

# கூடலழகர்பெருமாள் கோயில் கல்வெட்டுகள்

### 1. இடம்: அஷ்டாங்கவிமானத்தின் அடிப்பகுதியில் (அதிட்டானம்) வடபுறம், மேற்புறம் உள்ள கல்வெட்டு.

இக்கல்வெட்டின் சுருக்கம் சென்னைமாநில கல்வெட்டு ஆண்டறிக்கை(MERஎண்.558, 559/1911-ல் வெளியிடப் பட்டுள்ளது.

காலம்: சாலிவாகனசகாப்தம் 1473 (கி.பி.1551), விரோதிகிருது ஆண்டு விசயநகரவேந்தர் சதாசிவதேவமகாராயர் ஆட்சிகாலம் (கி.பி.1542-1570)

செய்தி: விசயநகரவேந்தரின் தட்சிண மகாமண்டலேசுவர் இராமராசவிட்டலதேவ மகாராயருக்குப் புண்ணியமாக அவரது அதிகாரியாக விளங்கிய வஸவணநாயக்கர் மகன் திம்மப்பநாயக்கர் கூடலழகியப் பெருமாளுக்கு நித்தியப்படி நைவேத்தியத்திற்கும் தசமித்திருநாள் கட்டளைக்கும் மதுரைமண்டலத்தில் பல கிராமங்களைத் தானமாகத் தந்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இதற்காகப் பெருங்குடி, இரட்டைக்குளம், வண்ணானேந்தல், குமுழங்குளம், சிந்தாமணி, முள்ளிப்பள்ளம், புல்வாய்க்கரை, அல்லிகுளம், செங்குளம், குண்டுகுளம், பசுமண்குளம் போன்ற ஊர்களில் இருந்த நிலங்கள் தானமாகத் தரப்பட்டன. இதிலிருந்து வந்த ஆயிரங்கலம் நெல்லும் தொண்ணூறு பொன்னும் கோயிலுக்கு அளிக்கப்பட்டன.

இக்கல்வெட்டின் பிற்பகுதி இத்தானத்திற்கு கூடல்அழகிய பெருமாளே திருவுள்ளம் மகிழ்ந்து ஆணை வழங்கியதாகக் கூறுகிறது. மேலும் இப்பணியைச் செய்கின்றவர்களுக்கு ஸ்தானிக வினியோகமாக மாடத்திருவீதியில் மனை ஒன்றும் நாள்தோறும் பெருமாளுக்குப் படைத்த பிரசாதத்தில் முக்குறுணி பிரசாதமும் அளித்ததைக் கூறுகிறது.

## கல்வெட்டுவரிகள்:

1.......ஸ்வஸ்தி ஸ்ரீமன்மகாமண்டலேஸ்வரன் உறரிராயவிபாடன் பாசைக்குத் தப்புவராயகண்டன் மூவராயகண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பூர்வ தட்சிணபட்சிம உத்திர சதுர்சமுத்திராதிபதி ஸ்ரீமஉறாராஜாதிராஜ பரமேஸ்வரன் வீரபிரதாப சதாசிவதேவ மஉறாராயர் பிரதிவிராச்சியம் பண்ணி அருளாநின்ற சதாப்தம் சூசளஎயங(1473) இதன்மேல் செல்லாநின்ற விரோதிகிருது சம்வத்சரத்து உத்தராயணத்து உேறமந்தருதுவில் மகரநாயற்று சுக்லபட்சத்து துவிதியையும் பௌதவாரமும் சிராவண நட்சத்திரத்து ஸித்தயோகமும் கௌலவகரணமும் பெற்ற மகரசம்கிராம புண்யகாலத்தில் ஸ்ரீமத் வஸ்வணநாயக்கர் புத்திரந் திம்மப்பநாயக்கர்களுக்குப் புண்ணியமாக ஸ்வாமி சந்தோப சௌந்தரரான கூடலழகிய பெருமாளுக்கு நித்தியபடி நைவேத்யத்துக்கும் தசமி திருநாள் கட்டளைக்கும் ஆக ஸ்ஹிரண்ணோதக தாராபூர்வமாக விட்ட கிராமங்களான மதுரைமண்டலத்தில் பெருங்குடியும் அதுக்குள்பட்ட இரட்டைக்குளம் வண்ணானேந்தல் குமுழங்குளம் அதுக்குள்பட்ட சதுசீமையும் இதுவும் அவநிநாராயணபுரத்தில் உள்கடையான சிந்தாமணிபற்றில் சேந்தநிலம் முப்பதுமாகவும் இதுவும்

ம(ண்)ட்டப்பாறை சீர்மையில் முள்ளிப்பள்ளம் கிராமம் சதுஸிமையும் திருப்புவணம் சீர்மை புல்வாய்க்கரை தட்டில் அல்லிக்குளம் செங்குளம் அதுக்குள்பட்ட குண்டுகுளம் பசுமண்குளம் அதுக்குள்பட்ட சதுசீர்மையும் ஆக இந்த கிராமம் (மூன்றுக்கும்) உள்கடை நிலம் முப்பதுமாவுக்கும் ஸதுசீர்மைக்குள்பட்ட ஸகலாதாயமும் உள்பட ............. இந்த பொன் தொண்ணூறு நெல் ............ நித்யபடி காலசந்திக்கு திநமொன்றுக்கு பூர்வ கட்டளை கலமாக ......... கறியமுது உள்படமேல் வெஞ்சனத்துக்கு திநம் ஒன்றுக்கு ......... வருசம் ஒன்றுக்கு கூடின.

2. .......... இவ்வகைப்படியில் படித்தரம் இட்டது பொன் கூய (90) நெல் சூ(1000) கலத்துக்கும் முன்சொன்ன இந்த கிராமம் மூன்று மனை(ஒன்று) நிலம் முப்பதுமாவும் ......... மகரசங்கர்ம புண்யகாலத்து ஸ்உறிரண்யோதக தாராபூர்வமாக குடுத்து தாநவிநிமய விக்யயோக்யமாக அனுபவிக்கும் படிக்கும்பட்டமும் குடுத்ததுக்கு ஸ்வாமி கூடல்அழகிய பெருமாள் மரகதமணிமண்டபத்தில் மாணிக்கக்கட்டிலில் நாச்சியாரும் தாமுமாக ஓலக்கமாக எழுந்தருளி இருக்கையில் ஸ்வாமி ஸ்ரீகாரிய ......... பெருமாள் திருமுன்பு விண்ணப்பம் செய்தபடிக்கு பெருமாள் திருவிளமுகந்து திருவாய்மலர்ந்தருளி நங்குமாரன் வசவணநாயகத் திம்மப்பனாயக்கன் தினமொன்றுக்கு கட்டளை இட்டதில் அமுதுபடிக்கு நெல்லுக்கும் மேல்வச்சபணம் இரண்டுக்கும் வருஷம் ஒன்றுக்கு துக்குடி கூலிய உக்கும் எல்லைக்கும் தசமத்திருநாள் கட்டளைக்கும் நமக்கு ஸ்ரீரங்கர் விடுகையில் விட்டவனை விழுக்காடு......... பொன்னுக்கு திநமொன்றுக்கு முக்குறுணி அமுதுபடி பிரஸாதம் குடுத்து மாடத்திருவீதியில் ஒருமனையும் குடுத்து அனுபவிக்கும்படி கட்டளை இட்டோம் என்று பெருமாள் திருமுகம் திருவுள்ளம் பற்றி அருளினபடிக்கு அந்தப்படியே ஸ்தானிக ........ லுள்ளவர்களும் ஸ்தாநவிநியோகமும் குடுத்து மாடத்திருவீதியிலே ஒருமனையும் ஸ்வாமி அமுதுசெய்த பிரசாதத்திலே திநமொன்றுக்கு முக்குறுணி அமுதுபடி (பிரஸாதம்) ஆசந்திராதித்தவத்ஸந்ததிபிரவேசமே அனுபவித்துவரும் படிக்கு வஸ்வணநாயக்க திம்மப்பனாயக் கரவர்களுக்கு பெருமாளும் ................ (இக்கல்வெட்டு முற்றுப்பெற வில்லை)

2. இடம்: அஷ்டாங்கவிமானத்தின் அடிப்பகுதியில் (அதிட்டானம்) தென்புறமுள்ள கல்வெட்டு. இக்கல்வெட்டின் சுருக்கம் செ.மா.க.ஆண்டறிக்கை(MER) எண். 557/1911ல் வெளியிடப் பட்டுள்ளது.

காலம்: விசயநகர்வேந்தர் சதாசிவதேவமகாராயர் காலம், கி.பி.1555-56

## செய்தி:

கூடலழகியபெருமாள் கோயிலின் கற்பக்கிரகத்தின் மூன்றாம் திருநிலைகாலினை அடுத்துள்ள பஞ்சாங்கம் நீங்கலாக இருக்கின்ற அர்த்தமண்டபத்தினை கந்தாடை கோனமன் என்பவன் திருப்பணி செய்வதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இதனை இவன் 1600 பணம் செலவில் கந்தாடை அண்ணனுக்குப் புண்ணியமாகச் செய்துமுடித்தான். தட்சிணமண்டலாதிபதி இராமராசவிட்டலதேவ மகாராயர் மற்றும் அவனது அலுவலகர்கள் வசவணநாயக்கர் திம்..பநாயக்கர், இம்முடி எல்லப்பநாயக்கர் நிர்வாகத்தின்போது இததிருப்பணி நிறைவேற்றி முடிக்கப்பட்டது. இக்கல்வெட்டில் இத்திருப்பணியைச் செய்துமுடிக்க தச்சர்களுக்குரிய கூலி எவ்வளவு என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கல்வெட்டுவரிகள்:

1. சுபமஸ்து பிலவங்க வருசம் புரட்டாசி மாதம் முதல் இராக்சசவருசத்துக்குச் செல்லும் நளவருசம் ஆனி மாதம் வரைக்கும் இராமராசவிட்டலதேவ மகாராயர் வசவணநாயக்கர் திம்மப்பநாயக்கர் அய்யன் பாராபத்யத்தில் கூடலழகியபெருமாள் கோயில் கெற்பகிரகம் மூன்றாந்திருநிலைக்காலில் அடுத்த பஞ்சாங்கம் நீங்கலாக அத்தமண்டபம் திருப்பணிக்கு கந்தாடைகோனமன் உபையமாக மதுரை ஆசாரிமார் இட்ட அடங்கல் பட்டோலை படிக்கு கூலி பணம் ௲சாள(1600)க்கு கந்தாடை அண்ணனுக்குப் புண்ணியமாக கந்தாடைகோனம்மன் கொண்டுவந்து சமர்ப்பித்த கூலி பணம் ௲உளருய (1250) கிட்டரா(யர்) வகையில் பணம் ரூபாய்(50) இந்த மண்டபம் இம்முடி எல்லப்ப நாயக்கர் அய்யன் பாராபத்யத்தில் நிறைவேறியது.

3. இடம்: கூடலழகப்பெருமாள்மகாமண்டபத்தின் உட்புறம், திருநிலைவாசலின் வடபுறம் உள்ள கல்வெட்டு. இக்கல்வெட்டு இதுவரை வெளியிடப்பெறவில்லை.

காலம்: கி.பி.16ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளது.

செய்தி: அண்டநாட்டில் உள்ள பெருமணலூரைச் சார்ந்த அழகர்தெய்வச்சிலைப் பெருமாள் என்பவன் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டிருக்கும் மகாமண்டபத்தின் நிலைவாயிலைச் **செய்வித்ததைத் தெரிவிக்கிறது.**

## கல்வெட்டுவரிகள்:

1. அண்டனாட்டுப் பெரு 2. மணநல்லூர் அழகர்
3. தெய்வச்சிலைப் பெருமாள் 4. சதாசேவை

4. இடம்: கூடலழகர்பெருமாள் அர்த்தமண்டபம் தென்புற திருநிலைக்காலிலுள்ள கல்வெட்டு. இக்கல்வெட்டு இதுவரை வெளியிடப்பெறவில்லை.

காலம்: கி.பி.16ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளது.

செய்தி: கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள நிலைவாயிலை நவமாணிக்கம் அலங்காரபட்டர் என்பவர் செய்வித்ததைத் தெரிவிக்கிறது.

## கல்வெட்டுவரிகள்:

1. நவமாணிக் 2. கம் அலங்கா
3. ர பட்டர்ச 4. தாசேவை

5. இடம்: நவநீதகிருஷ்ணன்கோயில் வாயிலின் அருகிலுள்ள உருவச்சிலையின் மீது பொறிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டு

இக்கல்வெட்டு இதுவரை வெளியிடப்படவில்லை.

காலம்: கி.பி.17-18ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் இக்கல்வெட்டு உள்ளது.

பொருள்: பெருமாள்நாயக்கர் மகன் நாட்டாண்மை அரிசிக்கண்டரின் சிலையைக் குறிக்கிறது.

## கல்வெட்டுவரிகள்:

1. ...ருத்ரோத்
2. காரிஷும் தைய்
3. உயஉ பெரும
4. நாயக்கர்
5. குமாரன்அரி
6. சிக்கண்டநா
7. ட்டாண்மை( ை
8. ம) ஸ்ரீராமசெயம்
9. சதா (சேவை)

(குறிப்பு: மேலேகண்ட கல்வெட்டுகளில் காணப்படும் கிரந்த எழுத்துக்கள் தமிழாக மாற்றி எழுதப்பட்டுள்ளன. இதே போன்று பண்டைய குறியீடுகள் தற்கால வடிவத்திற்கு மாற்றப்பட்டுள்ளன)

# கபிலர் பாடல்களின் அழகியலும் ஆளுமையும்

பேரறிஞர் தெ. திருஞானமூர்த்தி

சங்கப் புலவர் பலரால் பாராட்டப் பெற்ற சிறப்புக்குரியவர் கபிலர். அன்புணர்ச்சியும் வீறுணர்ச்சியும் கலந்த கலவையின் இணைப்பிற் பிறந்த அழகோவியங்கள் இவர்தம் பாடல்கள். இவரின் சொல்லாளுமையை அறிதல் நல்ல கவிதைகளை இனங்காண்பதற்கும் சிறந்த கவிதைகள் படைக்கப்பெறுவதற்கும் வழிகோலும். தொல்காப்பியரின் திணைக்கோட்பாட்டில் மெய்ப்பாடும் உவமையும் தனித்த இடத்தைப் பெறுகின்றன. உணர்ச்சிச் சித்திரிப்பில் கபிலர் உணர்ச்சியின் உச்சத்திற்கே சென்றுள்ளார். இவர்தம் பாடல்களில் உவமை ஆற்றலொடு பயன்படுத்தப்பெற்றுள்ளது. 'புலன் அல்லாதன புலனாதல்;கேட்டார்க்கு இன்பம் பயத்தல் உவமையின் நோக்கங்களாகும்' என்பர் இளம்பூரணர். உணர்ச்சியும் உவமையும் கபிலர் பாடல்களில் ஒன்றோடு ஒன்று போட்டியிட்டுப் பதிவாகியுள்ளது.

## முரணும் இணைவும்:

கபிலர் பாடுபொருளை மனத்தில் பதிக்கக் கையாண்ட உத்திகளுள் ஒன்று இயற்கையினும் தான் எடுத்துக்கொண்ட பாடுபொருள் சிறப்புடைத்து என்பதாகும். மாலையில் மறைகின்றாய், மலையில் ஒளிகின்றாய், தெற்கும் வடக்கும் மாறி ஒரு நிலையில் நில்லாது திரிகின்றாய். இவ்வாறு திரியும் ஞாயிறே எப்பொழுதும் மறையாது நிலைமாறாது நல்லாட்சி செய்யும் எம்மன்னனுக்கு எவ்வாறு நீ ஒப்பாவாய் (புறம்.8) என்கிறார். இங்கு உவமை ஞாயிறு = செல்வக்கடுங்கோ என இணைவாக அமையாமல் ஞாயிறு X செல்வக் கடுங்கோ என எதிர்வாக அமைந்து கவிதை சிறந்துள்ளது.

ஈண்டு நின்றோர்க்கும் நின் சிறுவரை சென்று நின்றோர்க்கும் தோன்றும் குன்றாய் நீ இருப்பதற்கும் நின் வளத்திற்கும் காரணம் தேர்வீசு இருக்கை நெடியோன் குன்று என்பதேயாகும்(புறம்.114) என்கிறார். மலைச்சிறப்பு மலைவளம் இரண்டற்கும் அடிப்படை பாரிவேள் குன்று என்ற கபிலர், சிறுவரை சென்றாலே மறையக் கூடிய குன்று காணக்கூடிய குன்றாக இருப்பதற்குக் காரணம் தேர்வீசு பாரி அங்குத் தங்கியமையே என்று சுட்டுவது நினைந்து மகிழ்தற்குரியதாகும். இயற்கைக்குப் பெருமை சேர்த்தவன் பாரி என்றாலே அது பெருஞ்சிறப்பாகும். ஆனால் கபிலரோ

செய்திக்குள் செய்தியாக முல்லையாகிய இயற்கைக்கும் வரையாது கொடுத்த வள்ளன்மை மிக்கவன் பாரி எனச் சிறப்பிக்கின்றார்.

பாரி= குன்று, பாரி = முல்லை என இணைவுகள் எதிர்வுகளாக அமைந்து இப்பாடல் சிறந்துள்ளது.

புறப்பாடல்களில் கபிலரின் கருத்துக் கட்டமைவு வெளிப்பட அமைந்துள்ளது. வெளிப்பட அமைந்தாலும் வீறுடன் அமைந்து கவிதை சிறந்துள்ளது. பாரியின் பறம்பு மலையைப் பெறுதல் வேலின் வேறல் வேந்தர்க்கு அரிதாகும். ஆனால் அதனை அடைதல் கிணையுடன் பாடி வரும் விறலிக்கு எளிதாகும் (புறம்.111) என்கிறார் கபிலர். இதில் வேந்தர் X விறலி என ஓர் எதிர்வும் வீரம் = கொடை என ஓர் இணைவும் அமைந்து கவிதை சிறந்துள்ளது. ஒரு கவிதை ஒரு கடுமையான எதிர்வையும் ஒரு சிறப்பான இணைவையும் கொண்டு அமைவது வேறெங்கும் காண முடியாத கபிலரின் தனித்த கவிதை ஆளுமையாகும்.

## நடப்பு முரண்:

நாள், கோள், நிமித்தம் மற்றும் மனித நம்பிக்கைகளுக்கு எதிரான கருத்துச் சித்திரிப்புக்களாக அமைந்து கபிலரின் பாடல் சிறந்துள்ளது. நன்னாள் அல்லாத நாளிற் சென்றாலும் செல்லும் வழியில் புள் நிமித்தம் தீதாகத் தோன்றினாலும் செவ்வியதான பொழுதன்றாயினும் மலையமான் திருமுடிக்காரியிடத்துச் செல்வோர் வறிது பெயர்குவோர் அல்லர்(புறம்.124) என்கிறார்.

தொல்காப்பியர் புறத்திணையியலில் வெட்சித்திணைத் துறைகளுள் ஒன்றாக 'உடல் வேந்து அடுக்கிய உன்ன நிலையும்' என ஓர் புறத்துறையைக் குறிப்பிடுகின்றார். இதற்கு உரையெழுதிய இளம்பூரணர் 'உன்னம் என்பது மரம். அது தன் நாட்டகத்துக் கேடு வருங்கால் உலறியும் வராத காலம் குழைந்தும் நிற்கும்' எனக் குறிப்பிடுகின்றார். போரில் கிட்டும் முடிவை முன்னரே காட்டும் நிமித்தமாக உன்னநிலை தொல்காப்பியரால் சுட்டப்பட்டுள்ளது. உன்னநிலை தனக்குத் தோல்வி எனத் தெரிவித்தாலும் அதனை வெற்றியாக்கிக் காட்டக் கூடிய வல்லாண்மை மிக்கவன் பாரி என்பதை உணர்த்த 'புன்கால் உன்னத்துப் பகைவன் எங்கோ' (பதிற். 7:61:6) எனக் குறிப்பிடுகின்றார். நட்டார்க்கு இனியனாகிய பாரி பகைவர்க்கு உன்னத்துப் பகைவனாய் வெற்றி கொள்ளும் ஆற்றல் மிக்கவன் என்ற கபிலரின் சொல்லாளுமை சிறப்பானதாகும்.

**படைப்பு முரண்: அகம் X புறம்:**

அகப்புற வேறுபாட்டை மிக நுட்பமாக விளக்கும் ஆற்றல் கபிலர் பாடல்களுக்கு உண்டு. புறம் பெயர் சுட்டல், செய்தி இவற்றால் மட்டுமன்று கூறும் முறையாலும் வேறுபட்டது என்பதைக் கபிலரின் புறப் பாடல்கள் வெளிப்பட அமைந்து உணர்த்தி நிற்கின்றன. ஆனால் அகப்பாடலைக் கபிலர் அமைக்கும் முறை மிகச்சிறப்பானதாகும். சக்தி முழுமையையும் திரட்டி ஆளுமையை நிலைநாட்டல் என்ற பாலியல் போரியல் என்ற இரண்டிற்கும் அடிப்படை என்றாலும் ஒன்று இருவருக்கும் இன்பத்திலும் மற்றொன்று ஒருவருக்கு இன்பத்திலும் ஒருவருக்குத் துன்பத்திலும் முடிகின்றது. ஒன்று மானுட நீட்சியாக அமைய மற்றொன்று மானுட அழிவாக அமைகின்றது. மேற்கூறிய கருத்துக்கள் அகப்புற வேறுபாட்டை முழுமைப்பட விளக்குவனவாக அமையவில்லை எனினும் ஒருவாறு அகப்புற வேறுபாட்டை விளக்குவதாகக் கொள்ளலாம். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு கபிலரின் நற்றிணை 13 ஆம் பாடலைக் காண்போம்.

*'எழாஅ யாகலி னெழில்நலந் தொலைய*
*அழாஅ தீமோ நொதுமலர் தலையே*
*ஏனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த*
*பகழி யன்ன சேயரி மழைக்கண்*
*நல்ல பெருந்தோ ளோயே கொல்லன்*
*எறிபொற் பிதிரிற் சிறுபல் காய*
*வேங்கை வீயுகு மோங்குமலைக் கட்சி*
*மயிலறி பறியா மன்னோ*
*பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே'*

தினைப்புனக் காவலர்கள் அதனைத் தின்றழிக்க வந்த பன்றி முதலாய் விலங்குகளைக் கொன்று வீழ்த்திய பின் பறித்தெடுத்த அம்பினைப் போன்ற செவ்வரி படர்ந்த கண்களை உடைய தலைவியே நன்றாகப் பருத்த தோள்களை உடையவளே.

கொல்லனது உலைக்களத்துப் பொறி சிதறுமாறு போலச் சிறிய பல காய்களையுடைய வேங்கையின் மலர்கள் உதிர்கின்றன.

உயர்ந்த மலையில் வேங்கைமரக் கூட்டிலிருக்கும் மயில்கள் அறியா வென்று கிளிகள் தினைக்கதிர்களைக் கவர்ந்து போகின்றன.

அதனைக் கண்டும் நீ அவற்றை ஓட்டுதற்கு எழுந்தாயில்லை. ஆதலின் நின் எழில் நலம் தொலைய அயலாரிருக்கும் இவ்விடத்து அழாதேனும் இருப்பாயாக என்கிறாள் தோழி. இதில் புறச்சித்திரிப்பு

அகச் சித்திரிப்பாய் அமைந்து பாடல் சிறந்துள்ளது.

தினைக் காவலர்கள் தினையழித்த விலங்கைக் கொன்று இரத்தம் தோய்ந்த அம்பைக் கைக்கொண்டனர். ஆனால் தன் பருவநலம் காத்துத் தினையையும் காக்க வந்த தலைவி தன் எழில்நலம் தொலைத்துப் பகழி யன்ன சேயரி மழைக்கண் உடையளானாள். நல்ல பெருந்தோள்களை உடைய தலைவி எனத் தோழி சுட்டுவது புணர்ச்சியால் அவள் மெய்வேறுபாடு உணர்த்தியதாகும்

. கொல்லனது உலைக்களத்து அடிக்கும் பொறி சிதறுமாறு போல வேங்கை மலர்கள் உதிர்வது தலைவனைப் பிரிந்த துன்பத்தை ஆற்ற மாட்டாத தலைவியின் கண்ணீர்ப்பூக்களாகும். உயர் மலை உயர்மரக் கூட்டிலுள்ள மயில் அறியாதென்று தினையைக் கவர்ந்து செல்லும் கிளிபோல நின் கூட்டம் யான் அறிவேன் பேதைப் பெண்ணே;நீ தினைப்புனம் காக்கவில்லை என்றாலும் அயலார் உள்ள இவ்விடத்தே அழாதேனும் இருப்பாயாக என்கிறாள் தோழி.

புறத்தில் விலங்கை வீழ்த்திய அம்பையுடைய குன்றவர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். ஆனால் அகத்தில் அம்பு போன்ற கண்களையுடைய தலைவியோ துன்பத்தில் உள்ளாள். அகம் புறம் இங்கு எதிர்நிலையில் இருப்பதைக் கபிலரின் கலைச்சித்திரம் சிறப்புற விளக்கி நிற்கின்றது. கொல்லன் உலைக்களத்து எறிபொற் பிதிர் ஆகத் தவைவி நெஞ்சம் என்கையில் கவிதை இன்னும் சிறக்கிறது. பூவுதிர் காட்சியைத் தலைவியோடு இணைக்கையில் பாடலின் நோக்கு நிலை மேலும் செம்மை பெறுகின்றது.

தொல்காப்பியரின் அகப்புற வேறுபாட்டைச் சிறப்புடன் வெளிப்படுத்தும் ஒரு களமாகக் கபிலரின் இப்பாடல் திகழ்கிறது.

*அடுத்த இதழில்...*

அன்பு அச்சகம், மதுரை - போன் 741116